Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு+II
விலை ரூபா 8.00


# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்


அசல் 22 கரட் தங்க நகைகளையும்,
ஓடர் நகைகளையும் குறித்த நேரத்தில்
உத்தரவாதத்துடன் செய்து
பெற்றுக்கொள்ள
கணேசா நகையகம்
194, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T.P. : 021 222 5987

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 சித்திரை– 30 ஆம் நாள் ஹிஜ்ரி 1428 ற–ஆகிர் 04 (13.05.2005) வெள்ளிக்கிழமை இதழ்:226

## சந்திவெளியில் பொதுமக்கள் மீதான தாக்குதல்; நல்லூரில் மாணவர்கள் கண்டனப் பேரணி!



(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு - சந்திவெளியில் அஹிம்சை வழியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது இராணுவத்தினர் கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தி பொதுமகன் ஒருவரைக் கொன்றதுடன் பலரைக் காயப்படுத்திய சம்பவத்தைக் கண்டித்து, யாழ்.நகரில் நேற்று மாணவர் சமூகத்தினரால் மாபெரும் கண்டனப்பேரணியொன்று நடத்தப் பட்டது.

இந்தக் கண்டனப் பேரணியில் பங்கேற்ற மாணவர்கள் - நல்லூர் பின் வீதியில் ஒன்றுகூடி காலை 10.30 மணியளவில் பேரணியாக கண்காணிப்புக்குழு அலுவலகத்தைச் சென்றடைந்தனர். அங்கு கண்டனக் கூட்டமொன்று நடைபெற்றது.

இந்தக் கண்டனக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மா.க.ஈழவேந்தன், சிவநேசன், இந்து மதகுருமார் ஒன்றியத் தலைவர், தேசிய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் மேலாதிக்கத்தை இந்தியா ஏற்கமாட்டாதாம்!

### சொல்ஹெய்மிடம் நேரடியாகத் தெரிவிப்பு

(புதுடெல்கி)

விடுதலைப் புலிகளின் மேலாதிக்கத்தை இந்தியாவால் ஏற்றுக்கொள்ள முடியாதென புதுடெல்கிக்கு விஜயம் செய்த நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம் இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சியாம் சரண் தெரிவித்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை சமாதான முயற்சிகள் தொடர்பாக இந்திய அரசின் அண்மைக்கால போக்குகளில் ஏற்பட்ட மாற்றங்களை அடுத்தே நோர்வே அரசின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் நேற்றுமுன்தினம் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்தார்.

சமாதான முயற்சிகளில் நோர்வேயின் மத்தியஸ்தம் தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாட்டை அறிந்துவரச் சென்ற சொல்ஹெய்மிடமே இந்திய வெளியுறவுச் செயலர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அத்துடன் - இலங்கை சமாதான முயற்சிகளில் நோர்வே அரசாங்கம் மேற்கொண்டுவரும் அனுசரணை முயற்சிகளை இந்தியா தொடர்ந்தும் ஆதரிக்கும் என்றும் சியாம் சரண் மேலும் தெரிவித்தார்.

சுமார் 90 நிமிடங்கள் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது - விடுதலைப் புலிகளின் வான்படைப்பலம், கடற்படைப்பலம் என்பன குறித்த இந்தியா

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியாவுடன் பாதுகாப்பு உடன்பாடு; நட்வர்சிங்கின் விஜயத்தில் முடிவாகும்!

## விரைவுபடுத்த இருதரப்பும் இணக்கம்!

(கொழும்பு)

**இந்திய வெளிவிவகாரஅமைச்சர் நட்வர்சிங் அடுத்த மாதம் கொழும்புக்கு விஜயம் செய்யும்போது, இந்திய -இலங்கை பாதுகாப்பு உடன்படிக்கை தொடர்பான தீர்க்கமான முடிவுகள் எட்டப்படுமென நம்புவதாக பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.**

2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு குறித்த பேச்சுக்களில் இன்னமும் முழுமையான இணக்கப்பாடு உருவாகவில்லை.

குறிப்பிட்ட சிலவிடயங்களில் இணக்கப்பாடு உருவாவதில் சிக்கல்கள் நீடிக்கின்ற அதேவேளை இந்திய மத்திய அரசுக்கு - அதன் கூட்டணிக் கட்சிகளிடமிருந்து கிடைத்த அழுத்தம் காரணமாக பாதுகாப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவது தாமதமடைந்து வந்தது.

இந்த நிலையில் கடந்த இரண்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே தூதுவர் குடாநாடு -வன்னிக்கு விஜயம்!

## பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த இரண்டுவாரகால அவகாசம்!

### தூதுவர்களிடம் கோரினார் சந்திரிகா

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதி மக்களுக்கு உதவி வழங்க விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பை கண்டியில் நடைபெறும் உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டிற்கு முன்னர் நிறுவுவதற்கான சாத்தியங்கள் இல்லாத நிலையில், மேலும் இரண்டு வாரகால அவகாசம் வழங்குமாறு ஜனாதிபதி சந்திரிகா கொழும்பிலுள்ள வெளி

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கத்தின் உள்வீட்டுப் பிரச்சினைகளை எடுத்துவிளக்கியதுடன் இதனால் பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவதற்கு இரண்டு வாரகால அவகாசம் தருமாறு கோரியுள்ளார்.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப் படுவதற்கு ஐ.தே.கட்சியிடமிருந்து

தெரிவித்தனர்.

2003 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்ட இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு குறித்த பேச் சுக்களில் இன்னமும் முழுமையான இணக்கப்பாடு உருவாகவில்லை.

குறிப்பிட்ட சிலவிடயங்களில் இணக் கப்பாடு உருவாவதில் சிக்கல்கள் நீடிக் கின்ற அதேவேளை இந்திய மத்திய அர சுக்கு - அதன் கூட்டணிக் கட்சிகளிட மிருந்து கிடைத்த அழுத்தம் காரண மாக பாதுகாப்பு உடன்படிக்கை கைச் சாத்திடப்படுவது தாமதமடைந்து வந் தது.

இந்த நிலையில் கடந்த இரண்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே தூதுவர் குடாநாடு -வன்னிக்கு விஜயம்!

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேத் தூது வர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் நேற்று யாழ். குடாநாட்டிற்கு விஜயத்தை மேற் கொண்டு நிலைமைகளை நேரில் அவதானித்தார்.

விமானம் மூலம் பலாலி விமான நிலையத்தை வந்தடைந்த நோர்வேத் தூதுவர் - பருத்தித்துறைப் பகுதிக்கு விஜயம் செய்து நோர்வே நாட்டின் நிதியுதவியுடன் நடைபெறும் படகு கட்டுமானப் பணிகளைப் பார்வை யிட்டார்.

தொடர்ந்துசுனாமியால் சேதமடைந்த வெளியிணைப்பு இயந்திரங்கள் திருத்தும் இடத்தையும் பார்வையிட் டார். மேற்படி பணிகளை விரிவாக மேற்கொள்வதற்கான உதவிகளைச் செய்வதாக உறுதியளித்த ஹான்ஸ் பிரட்கர், பெரிய வள்ளங்களின் இயந்

(12 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதி மக்களுக்கு உதவி வழங்க விடுதலைப் புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பை கண்டியில் நடைபெறும் உதவிவழங் கும் நாடுகளின் மாநாட்டிற்கு முன்னர் நிறுவுவதற்கான சாத்தியங்கள் இல் லாத நிலையில், மேலும் இரண்டு வார கால அவகாசம் வழங்குமாறு ஜனாதி பதி சந்திரிகா கொழும்பிலுள்ள வெளி நாட்டுத் தூதுவர்களைக் கேட்டுள்ள தாகத் தெரியவருகிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற வெளிநாட்டுத் தூதுவர்களுடனான சந்திப்பிலேயே ஜனாதிபதி இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி சந் திரிகா குமாரதுங்க - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கத்தின் உள்வீட்டுப் பிரச்சினை களை எடுத்துவிளக்கியதுடன் இதனால் பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படு வதற்கு இரண்டு வாரகால அவகாசம் தருமாறு கோரியுள்ளார்.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப் படுவதற்கு ஐ.தே.கட்சியிடமிருந்து போதிய ஆதரவு கிடைக்காத காரணத் தால் பிரச்சினை மேலும் சிக்கலடைந் துள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்த ஐ.தே. கட்சியின் ஆதரவை பெற்றுத் தரு மாறும் தூதுவர்களிடம் கேட்டுள்ளார் எனத் கொழும்புத் தகவல்கள் தெரிவித் தன. (தே)

## ஈ.பி.டி.பி. வாகனத் தொடரணி மீது வாழைச்சேனையில் துப்பாக்கிச்சூடு!

### நான்கு பொலிஸார் படுகாயம்

(மட்டக்களப்பு)

ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர்கள் பய ணம் செய்த வாகனத் தொடரணி மீது வாழைச்சேனையில் வைத்து இனந்தெரியாதநபர்களால் மேற்கொள் ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் - பாதுகாப்புக் காகச் சென்ற நான்கு பொலிஸார் படுகாயமடைந் தனர்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

ஈ.பி.டி.பியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப் பாளர் சிவானந்தராசா, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரத்தியேகச் செயலாளர் அந் தோனிப்பிள்ளை ஜெயராசா உள்ளிட்ட 8 ஈ.பி.டி.பி யினர் இரண்டு வாகனங்களில் சென்றுகொண் டிருந்தபோது இவர்களுக்கு முன்னும் பின்னு மாக பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவு பொலி ஸார் இருவர் உள்ளிட்ட 8 பொலிஸார் இந்தப் பாதுகாப்பில் ஈடு பட்டிருந்தனர்.

இந்த வாகனத் தொடரணி வாழைச்சேனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்துக் கும் பிரதேச செயலகத்துக்கும் இடையில் சென்று கொண்டிருந்தபோதே இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப்பிரயோ கம் மேற்கொண்டனர்.

தொடரணியின் முன்னே சென்று கொண்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பானிய விசேட தூதுவர் ஜயந்த தனபாலவைசந்திப்பு!

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஜப்பா னிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி - அரச சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் ஜயந்த தனபாலவை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

சமாதான நடைமுறையின் தற்போதைய நிலைகுறித்து ஜயந்த தனபாலவுடன் அகாஷி விரிவான பேச்சுக்களை நடத்தியதாகத் தெரிய வருகிறது.

இதன்போது சுனாமி அனர்த்தத்திற்கு பின் னான புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது.


எட்டுநாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம் இலங்கை வந்துள்ள அகாஷி, ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்கவை நேற்றுக்காலை சந்தித்து பேசியிருந்தமை குறிப் பிடத்தக்கது.

இலங்கைத் தீவில் சமாதானத்தை ஏற்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்து வது குறித்து ஜப்பான் அதிக கவனம் செலுத்தி வரு வதாக ஜப்பானின் இலங்கைக்கான விசேட தூதுவர் யசூஷிஅகாஷி தெரிவித்தார்.

இலங்கை விஜயம் தொடர்பாக அவர் கருத் துத் தெரிவித்தபோதே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில் -

இலங்கைக்கு 10 ஆவது தடவையாக விஜ யம் செய்துள்ளேன். இம்முறை ஜனாதிபதி உட் பட அரசுப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வுள்ளேன்.

(12 ஆம் பக்கம் பார்க்க)


எக்ஸ்போ ஏயர்
வான்வெளியில் உங்கள் நண்பன்...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...

# அரசின் நோக்கில் மாற்றம் ஏற்படும்வரை உதவும் நாடுகள் கூட்டத்தை பிற்போடுங்கள்!

## அவுஸ்ரேலிய உயர் ஸ்தானிகருக்கு அவசர கடிதம்

இலங்கை அரசாங்கத்தின் பேரினவாத போக்கில் ஆக்கபூர்வமான மாற்றங்கள் ஏற்படும்வரை - இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தை பிற்போடுமாறு, இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகருக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இருபது வருடங்களுக்கு மேலாக இலங்கைத் தமிழரின் உரிமைப் போராட்டம் நடைபெற்றுவருவது உலகறிந்த விடயம். இதன் நியாயப்பாட்டை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டதுடன், இலங்கை அரசும் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்த உடன்படிக்கையைச் செய்து ஒரு யுத்தமற்ற சூழல் ஏற்படுத்தப்பட்டது.

போர்நிறுத்த ஒப்பந்தம் பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளானபோதும் இன்றுவரை தாக்குப்பிடித்து நிற்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளது போர்நிறுத்த உடன்பாட்டின் மீதான உறுதியும், சர்வதேச நாடுகளின் பல்வேறு பங்களிப்புச் செயற்பாடுகளும் பிரதான காரணங்களாகும்.

இந்தப் போரற்ற சூழ்நிலை மிக விரைவில் மாறிவிடுமோ என்ற அச்சம் தமிழர்களின் மத்தியில் மட்டுமன்றி சர்வதேச சமூகத்துக்கும் ஏற்பட்டுள்ளது. இலங்கையில் எதிர்வரும் 16 ஆம் 17ஆம் திகதிகளில் கண்டியில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு நடைபெறவுள்ளதாக அறிகின்றோம். அதில் கலந்துகொள்ளவுள்ள உலக நாடுகளுக்கு நாம் சில விடயங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி இன்றுவரை இலங்கை அரசினால் எந்தவொரு ஆக்கபூர்வமான தீர்வும் எட்டப்படாமல் கால இழுத்தடிப்பு மட்டுமே நடைபெற்றுள்ளது. தமிழ்மக்கள் மீது தொடர்ந்தும் இராணுவ அச்சுறுத்தல்களும் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் வாழ்விடங்கள் மக்களுக்கு ஒப்படைக்கப்படாத நிலையிலும், தமிழ்மக்களுக்கு இயல்பு வாழ்க்கை ஏற்படாத நிலையில் அதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தும் மக்களின் போராட்டங்கள் இன்னமும் தொடர்ந்துகொண்டேயிருக்கின்றன.

வடக்கு - கிழக்கு இணைந்த தன்னாட்சி அதிகாரத்தினூடான இடைக்கால நிர்வாக கட்டமைப்பு ஏற்படுத்தப்படவேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் முன்மொழிவு புறந்தள்ளப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்த பொதுக்கட்டமைப்பு முன்மொழிவு இழுத்தடிக்கப்பட்டு இலங்கை அரசியலின் வஞ்சக செயற்பாடுகளுக்கு களமாகி தமிழ் மக்கள் நம்பிக்கை இழக்கக் காரணமாகிவிட்டது.

தற்போது பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் சர்வதேச சமூகத்தை திசை திருப்ப அரசும் ஜனாதிபதி சந்திரிகாவும் பொதுக் கட்டமைப்பு என்ற எதுவுமே இல்லாத ஒரு விடயத்தை பெரிதாக்கி, தனது அரசியல் லாபம் தேட எத்தனிக்கிறார். உலக நாடுகளின் உதவியைப் பெற்று பேரினவாத அரசைப் பலப்படுத்திக் கொள்ள சந்திரிகா அரசுக்கு பொதுக் கட்டமைப்பு இன்றியமையாததாக உள்ளது.

இலங்கை அரசின் யதார்த்த நிலையைக் கருத்திற்கொண்டு காலங்காலமாக உலகநாடுகளை ஏமாற்றி வரும் இலங்கை அரசு, இம்முறையும் தனது கபடநாடகத்தை ஆரம்பித்துள்ளது. இந்த நிலையில் உதவி வழங்கும் நாடுகளின் நல்லெண்ணத்துடனான முன் முயற்சியின் பிரதிபலிப்பான கண்டி மாநாடு அரசாங்கத்துக்கு போர் முன்னெடுப்புக்கு துணைபோய்விடலாம் என்ற அச்சமும் தமிழ்மக்களுக்கு எழுந்துள்ளது. ஆகையால் மாநாட்டைக் கூட்டுவதற்கான தேவையும் இல்லையென்றே கருதுகிறோம்.

இந்த மாநாட்டை ஒத்திப்போடுவதற்கான வெளிப்படையான காரணத்தைக கருத்திற்கொண்டு அரசாங்கத்தின் பேரினவாதப் போக்கில் ஆக்கபூர்வமான மாற்றங்கள் ஏற்படும் வரையில் இம்மாநாட்டை கூட்ட வேண்டாம் என கேட்டுக்கொள்கிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# க.பொ.த உ/த பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான கருத்தரங்கு!

(கிளிநொச்சி)

எதிர்வரும் யூன் மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நலன்கருதி யாழ். பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றமும், தமிழீழ மாணவர் அமைப்பும் இணைந்து நடத்தும், பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நாளை காலை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதன்படி நாளை காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை வணிகக் கல்வி தொடர்பான கருத்துரையை யாழ். பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் க.தேவராசா மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இரட்ணம் இருவரும், பகல் 11.15 மணி தொடக்கம் ஒரு மணிவரை கணக்கீடு தொடர்பான கருத்துரையை சிரேஷ்ட விரிவுரையாளர் கே.அருள்வேலும், பகல் 1.30 தொடக்கம் 3.30 வரை பொருளியல் பாடம் தொடர்பாக வே.கருணாகரன் ஆகியோரும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

எனவே, இந்தக் கருத்தரங்கில் பாடசாலை மாணவர்களையும் குறிக்கப்பட்ட பாட ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

# கரந்தன் - நீர்வேலிப் பகுதியில் வீடுடைத்து நகை, பணம் திருட்டு!

கரந்தன், நீர்வேலிப் பகுதியில் வீடொன்றின் ஜன்னலை உடைத்து உட்புகுந்த திருடர்கள் 70 பவுண் நகைகள் மற்றும் 15 000 ரூபா பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம், திருநெல்வேலிச் சந்தையில் வியாபாரம் செய்யும் ஜெயா என்பவரது வீட்டிலேயே இடம்பெற்றுள்ளது.

வீட்டிலுள்ளவர்கள் உறக்கத்தில் இருந்தவேளை, வீட்டு ஜன்னல் கம்பியை உடைத்து உட்புகுந்த திருடர்கள் இவற்றைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு 40 ஆயிரம் ரூபா!

(யாழ்ப்பாணம்)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக - சிற்பிகளின் நாயகி பாமாலை இறுவட்டு வெளியீட்டு விழாவின்போது சேகரிக்கப்பட்ட 40 ஆயிரம் ரூபா பணம் நேற்றுமுன்தினம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் கையளிக்கப்பட்டது.

கடந்த 9 ஆம் திகதி திருநெல்வேலி ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற இந்த இறுவட்டு வெளியீட்டு விழாவில் சேகரிக்கப்பட்ட 40 ஆயிரம் ரூபாவும் நேற்றுமுன்தினம் ஆலயத்தின் சார்பாக இறுவட்டுத் தயாரிப்பாளர் என்.சண்முகபாலன் தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ். மாவட்டப் பணிப்பாளர் ஜெயராஜிடம் கையளித்தார்.


தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கம் (வரைவுள்ளது)

**வகுப்புத் தொழிலாளர் தேவை**

தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கத்தில் வகுப்புத் தொழிலாளர் வேலை செய்வதற்கு தொழிலாளர் தேவை. சம்பளம் துண்டுவீத அடிப்படையில் பேசித் தீர்க்கப்படும். விரும்புவர்கள் தேசிய அடையாள அட்டையுடனும், பிற விபரங்களுடனும் நேரடியாக வரவும்.

பொது முகாமையாளர்
06.05.2005 தெல்லிப்பளை ப.நோ.கூ.சங்கம்
(சு-4121)


# மாபெரும் மருத்துவ கருத்தரங்கு நாளை யாழில் ஆரம்பம்!

இலங்கை அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் சங்கமும் யாழ் மருத்துவர் சங்கமும் இணைந்து நாளையும் நாளை மறுதினமும் மருத்துவக் கருத்தரங்கு ஒன்றினை யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளனர். இதற்கான ஆரம்ப நிகழ்வுகள் இன்று மாலை 6.30 மணிக்கு லொயலாஸ் மண்டபத்தில் நடைறெவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்வதற்கு கொழும்பிலிருந்து 20 சத்திரசிகிச்சை நிபுணர்கள் உட்பட 45 பேர் கொண்ட மருத்துவக் குழு ஒன்று விமானம் மூலம் இன்று யாழ். குடாநாட்டிற்கு வருகை தரவுள்ளது.

இந்தக் கருத்தரங்கு தொடர்பாக யாழ். மருத்துவர் சங்கச் செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில் -

சத்திர சிகிச்சை நிபுணர்களின் பிராந்திய ரீதியான முதலாவது கருத்தரங்கை யாழ்ப்பாணத்தில் நடத்துவதையிட்டு பெருமையடைகிறோம். இந்தக் கருத்தரங்கின் மூலம் சர்வதேச சத்திரசிகிச்சை முறைகள் தொடர்பாக அறிந்துகொள்ளமுடியும். மேற்படி கருத்தரங்கில் வெவ்வேறு துறைசார்ந்த நிபுணர்கள் கருத்துரைகள் வழங்கவுள்ளனர்.

கருத்தரங்கு காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. எனவே மருத்துவத்துறையுடன் தொடர்புடையவர்களை மேற்படி கருத்தரங்கில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அவர் தெரிவித்துள்ளார்.

## சின்னஞ்சிறுசெய்திகள்

### வாராந்த கலைநிகழ்வு

(வடமராட்சி)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாரந்தோறும் வெள்ளிக் கிழமைகளில் நடைபெற்றுவரும் கலை நிகழ்ச்சிகளில் இன்று முற்பகல் 10.30 மணியளவில் பெரியபுலம் மகா வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (14)

### மாணவர்கள் தொடர்புகொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய நிலையத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியைக் கற்கும் மாணவர்களுக்கான கடிதங்கள் முதன்மை ஆசிரியரால் அனுப்பப்பட்டுள்ளன.

எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் கற்பித்தல் பயிற்சிக் கூட்டம் ஆரம்பமாக இருப்பதால் இதுவரை முதன்மை ஆசிரியர்களிடம் இருந்து கடிதம் கிடைக்கப் பெறாத மாணவர்களை யாழ். பிராந்திய நிலையத்துடன் தொடர்புகொள்ளுமாறு இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய இயக்குனர் எந்திரி ச.ஆ. ஞானேந்திரா கேட்டுள்ளார்.


மனோகரா யாழ்ப்பாணம்
சரத்குமார், அறிமுகம் ரமேஷ், பூஜா, கலாபவன் மணி மற்றும் பலர் நடித்த
ஐதீஸ்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
ரஜினிகாந், நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடிப்பில்
(C3979)

சந்திரமுகி
50 ஆவது நாளை நோக்கி...
காட்சி நேரம் :- (பு.நே.) 11.00, 3.00,7.00,

ராஜா யாழ்ப்பாணம்


பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30
விரைவில் இந்தியா இலங்கையில் ஒரேதின வெளியீடு
அறிந்தும் அறியாமலும்



தில்லையம்பதியாள் துணை

சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி
அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்
பார்த்திப வருஷம் 30 வது ஆண்டு
வைகாசி மஹோற்சவப் பெருவிழா 2005



| | | |
|---|---|---|
| 14.05.2005 | சனி | முற்பகல் 11.00மணி கொடியேற்றம் |
| 18.05.2005 | புதன் | மாலை 7.00மணி பூ ச்சப்பறம் |
| 19.05.2005 | வியாழன் | மாலை 7.00மணி வசந்தஉற்சவம் |
| 21.05.2005 | சனி | மதியம் அன்னதானம் முற்பகல் 3.00மணி வேட்டைத்திருவிழா (ஞான வைரவர் ஆலயமுன்றலில்) மாலை 7.00மணி சப்பறம் |
| 22.05.2005 | ஞாயிறு | முற்பகல் 10.00மணி தேர்த்திருவிழா(மதியம் அன்னதானம்) |
| 23.05.2005 | திங்கள் | முற்பகல் 10.00மணி பூ ரண தீர்த்த உற்சவம் (மதியம் அன்னதானம்) மாலை5.30மணி திருவூ ஞ்சல். கொடியிறக்கம். சண்டேஸ்வரி உற்சவம். |
| 24.05.2005 | செவ்வாய் | மதியம் அன்னதானம். இரவு பூ ங்காவனம் |
| 25.05.2005 | புதன் | காலை 6.00 பிராயசித்த அபிஷேகம் இரவு வைரவர்மடை. |

மஹோற்சவபிரதம குரு
ஆகம கலாசூரி சிவஸ்ரீ சு.வைத்தீஸ்வரக்குருக்கள்

மங்கள இசை
செல்வன் நா. பிரசாத் குழுவினர்

குறிப்பு: தீர்த்த உற்சவத்தின்போது கவிமாமணி ந.வீரமணிஜயர் அவர்களால் ஆக்கம் பெற்று ரி.எம்.எஸ் செல்வக்குமார் அவர்களால் பாடப்பெற்ற அம்பாளின் தீர்த்த உற்சவ கீர்த்தனை ஒலிக்க செய்தல்.

வைகாசி மாதத்திலே - எங்கள் தாய்
வானுயர் கொடியேற்றி
கையால் அபயம் காட்டி - எமக்குக்
காட்சி யருள் தருவாள்
கோலா கலமாக-மஹோத்ஸவம்
கொண்டாட வைத்திடுவாள்
கோண்டாவில் தில்லையம்பதி-குதூகலக்
கோலமுண்டாக் கிடுவாள்
பாடலை பாடியவர் இசைமாமணி சீர்காழி சிதம்பரம்

தினமும் இரவு 08மணி தொடக்கம் 09.மணிவரை தெய்வீகப் பேருரை நடைபெறும்
தில்லையம்பதியாளே சிவகாம சுந்தரியே தொல்லைகள் தீர்ப்பாயம்மா.

தில்லையம்பதி.
13.05.2005
பரிபாலனசபை.

# ஆளும் கூட்டணியின் கொள்கைகளுக்கு சுதந்திரக் கட்சி தீங்கிழைத்துவருகிறது!

## ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா



(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் இணைந்து இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கம் முயன்றவேளை - அதை எதிர்த்து எம்முடன் கூட்டமைப்பை ஏற்படுத்தியவர்கள், இன்று விடுதலைப் புலிகளுடன் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துவோமென, எமக்கு அழுத்தம் தருகின்றார்களென ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப் படுவதற்கு எதிராக கொழும்பு மாநகரசபை மைதானத்தில் ஜே.வி.பியினர் நடத்திய எதிர்ப்புக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் -

மக்கள் அரசாங்கத்தைத் தோற்றுவிப்பதாகக்கூறிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொள்கைகளுக்குத் தீங்கிழைத்து வருகின்றனர்.

விடுதலைப் புலிகளுடன் பொதுக் கட்டமைப்பை தற்போதைய அரசாங்கம் ஏற்படுத்த முயற்சிக்கின்றது. இது குறித்து நாம் அமைச்சரவைக்கல்ல, இந்த நாட்டு மக்களுக்கே விளக்கிக் கூறவேண்டியவர்களாக உள்ளோம்.

அரசின் பிரதியமைச்சர்கள் பொதுக் கட்டமைப்பு சிறந்ததெனக்கூறி அனைத்து இடங்களிலும் கூட்டங்களை நடத்தி வருகின்றனர். எனவே, மக்களுடன் இது குறித்துக் கலந்துரையாட நாம் தீர்மானித்தோம்.

இந்தப் பொதுக்கட்டமைப்புச் சிறந்ததென சிலர் கூறுகின்றனர். அவ்வாறெனில், ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசைத் தோற்கடித்து, இந்த அரசாங்கத்தைத் தோற்றுவித்தது ஏன்? இந்த அரசாங்கத்தை அமைத்தது புதிய பாதையில் செல்வதற்காகவாகும்.

ஆனால், அரசு பழைய பாதையில் செல்ல முயற்சிக்குமெனில், அந்தப் பாதையில் செல்லக்கூடாதெனக் கூற எமக்கு உரிமை உள்ளது.

புலிகளுக்குக் கப்பம் மற்றும் இடைக்கால நிர்வாகம் என்பன வழங்கவேண்டாமெனக்கூறி, பரந்த மக்கள் சக்தியை நாமே ஏற்படுத்தினோம். இதில் அரசாங்கத்திலுள்ள அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர். அன்று இந்த எதிர்ப்பில் பங்கேற்றவர்கள் இன்று பொதுக்கட்டமைப்பு சிறந்ததெனக் கூறி வருகின்றனர்.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப் படுவது, வடக்கு - கிழக்கை மனிதாபிமான அடிப்படையில் கட்டியெழுப்பவென கூறப்படுகின்றது. இடம்பெயர்ந்த அனைவருக்கும் நாம் உதவ விரும்புகின்றோம். தற்போது அரச நிர்வாகம் உள்ளது. இந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள், அதிகாரிகள் போல தலைவர்கள் தயாரித்த கட்டமைப்புகளும் உள்ளன. எனவே வடக்கு - கிழக்குக்கு மாத்திரம் ஏன் தனியான கட்டமைப்பு ஏற்படுத்தப்படவேண்டும்?

விடுதலைப் புலிகளும், அவர்கள் வழிநடத்துகின்ற சர்வதேச அமைப்புகளும் இந்த நாட்டை யுத்தமில்லாமல் இரண்டாகப் பிரிக்க முயற்சிக்கின்றனர். சுனாமி அழிவு ஏற்பட்டவேளை, வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களை விடுதலைப்புலிகள் மட்டும் பராமரிக்கவில்லை. எமது படைகளும் பராமரித்தன.

மனிதாபிமானமற்ற வேலைகளைச் செய்த புலிகளுடன் அரசாங்கம் இன்று மனிதாபிமான உதவித் திட்டங்களை வழங்கச் செல்கின்றது. இந்தத் திட்டத்தை நாம் விரும்பவில்லை. இன்று அரசாங்கத்தில் உள்ள சிலர் யுத்தத்துக்கு அஞ்சுகின்றனர்.

பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டால், வடக்கு - கிழக்கின் அனைத்துப் பகுதிகளும் விடுதலைப் புலிகளிடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைப்பதற்குச் சமனாகும். யுத்தத்தால் செய்யமுடியாததை, நாட்டை இரண்டாகப் பிரித்து, சர்வதேச புரிந்துணர்வுக்குச் சென்று, பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தி, தங்களது ஈழ அரசை நோக்கிச் செல்லும் பயணத்தை மேற்கொள்ளவே புலிகளின் தலைவர் பிரபாகரன் விரும்புகின்றார்.

நாம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை ஏற்படுத்துவதற்கு முன் அதன் கொள்கை குறித்து பத்து மாதங்கள் வரை கலந்துரையாடினோம். அது திருட்டுத்தனமாக மேற்கொள்ளப்பட்ட ஒன்றல்ல. அனைவரது முன்னிலையிலும் நாம் கையொப்பமிட்டோம்.

நாட்டை முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டத்துக்கு எதிராக யாராவது செயற்படுவார்களாயின், அவர்களைத் தோற்கடிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுப்போம் என அவர் தெரிவித்தார். (தே)


## திட்டமிட்டபடி உயர்தரப் பரீட்சை

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைகள் திட்டமிட்டபடி ஜூன் 6 ஆம் திகதி ஆரம்பமாகும் என பரீட்சைகள் ஆணையாளர் எம்.விஜயசிறி தெரிவித்தார்.

அனுமதிப் பத்திரங்களை பரீட்சை ஆரம்பமாவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் பரீட்சார்த்திகளுக்கு கிடைக்கக் கூடிய வகையில் அனுப்பி வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சுமார் இரண்டரை லட்சம் பரீட்சார்த்திகள் இந்தமுறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.



ஜே.வி.பியினரின் பொதுக்கட்டமைப்பு எதிர்ப்புக் கூட்டத்தில் கலந்துகொண்டோர்

# பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்த சகல கட்சிகளும் உதவவேண்டும்!

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை உரிய முறையில் வழங்குவதற்கு பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டுமெனவும், அதற்கு அனைத்துக் கட்சிகளும் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க வேண்டுமெனவும் மகாவலி மற்றும் ஆற்றுவள அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மகாவலியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தனதுரையில் -

பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்தப் படுவதன்மூலம் விடுதலைப் புலிகளுக்குத் தனி ராஜ்ஜியம் ஒன்றை வழங்கவுள்ளதாகவும், நாட்டை இரண்டாக்கப்போவதாகவும் சில கட்சிகள் கூறுவதில் எவ்வித உண்மையுமில்லை.

பொதுக் கட்டமைப்பு என்பது சர்வதேச சமூகத்தின் ஆலோசனையாகும். கிராம மக்கள்தான் போரின் உண்மையான துன்பத்தை அனுபவிக்கின்றனர். கொழும்பு லிப்டன் சதுக்கத்தில் சமாதானத்துக்கு விரோதமாக மறியல் செய்பவர்களுக்கு இந்தத் துன்பம் விளங்கமாட்டாது.

இடைக்கால நிர்வாகத்தின்மூலம் அதிகாரத்தைக் கேட்டிருந்த புலிகள் இன்று பொதுக் கட்டமைப்பென கீழிறங்கி வந்ததை அனைவரும் கவனத்தில் கொள்ளவேண்டும் எனத் தெரிவித்தார். (தே)

# தாழங்குடாவில் குடும்பஸ்தர் வெட்டிப் படுகொலை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடுத்தர வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார். தாழங்குடாப் பகுதியில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 40 வயதுடைய சின்னத்தம்பி மகேஸ்வரலிங்கம் என்பவரே கொலை செய்யப்பட்டதாக அடையாளம் காணப்பட்டார்.

4 பிள்ளைகளின் தந்தையான மகேஸ்வரலிங்கம் தனது வீட்டில் உறங்கிக்கொண்டிருந்தபோது, வீட்டுக்குள் நுழைந்த இனந்தெரியாத நபர்கள் வெட்டிக்கொலை செய்துவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர். இந்தக் கொலை தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# போராளிகளின் பயணம் பிற்போடப்பட்டது!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலிருந்து தரைவழியாக விடுதலைப் புலிப் போராளிகள் 52 பேர் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி செல்லவிருந்த பயணம் கடைசி நேரத்தில் ரத்துச்செய்யப்பட்டது.

இராணுவப் பாதுகாப்புடன் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அனுசரணையுடன் செங்கலடி கறுத்தப்பாலம் முதல் ஓமந்தை இராணுவ சோதனைச்சாவடி வரை இந்தப் பயண ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சந்திவெளி சம்பவத்தைக் கண்டித்து கிழக்கு பல்கலைக்கழக சமூகம் நேற்றுமுன்தினம் நடத்திய வீதி மறியற் போராட்டம் காரணமாகவே, இந்தப் பயணம் - திகதி குறிப்பிடப்படாமல் பிற்போடப்பட்டது.

# ஊடகவியலாளர் சிவராமுக்கு சென்னையில் அஞ்சலிக்கூட்டம்

(சென்னை)

கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்ட ஊடகவியலாளர் டி.சிவராமுக்குச் சென்னையில் அஞ்சலிக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

மைலாப்பூர் ஸ்ரீனிவாசா மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்ட இந்தக் கூட்டத்தை - தமிழ்நாடு மனித உரிமைகள் முன்னேற்றக் கழகத்தினருடன் இணைந்து யாழ்.பல்கலைக்கழக ஊடகவளங்கள் பயிற்சி நிலைய மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

தமிழ்நாடு மனித உரிமைகள் முன்னேற்றக் கழகத்தின் இணைப்பாளர் ரி.எஸ்.எஸ்.மணி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பி.பி.சி.செய்தியாளர் ரி.என்.கோபாலன், டெக்கன் ஹெரால்ட் பத்திரிகையைச் சேர்ந்த முராஜி, பயனியர் பத்திரிகையைச் சேர்ந்த வெங்கட்ரமணன் ஆகியோரும் -

சென்னையில் உள்ளகப் பயிற்சி பெறச்சென்ற யாழ்.ஊடகவளங்கள் பயிற்சி நிலைய மாணவர்களான செய்தியாளர்கள் ந.பரமேஸ்வரன், ஆர்.தயாபரன், க.வேல்தஞ்சன் ஆகியோரும் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினர்.

இங்கு அஞ்சலி உரை நிகழ்த்திய ரி.என்.கோபாலன் - ஈழத்தமிழர் வரலாறு, போராட்டம் குறித்து ஆழமான புலமையைக் கொண்டிருந்தவர் சிவராம். இலங்கைப் பிரச்சினை பற்றிய எந்தவொரு தகவலையும் அவரிடமிருந்து பெறக்கூடியதாக இருந்தது என்றும் குறிப்பிட்டார். இந்த அஞ்சலிக் கூட்டத்தை முன்னிட்டு மைலாப்பூர் பகுதியில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. தமிழகத்திலிருந்து ஊடகவியலாளர்கள் உட்பட பலர் இந்த அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் பயிற்சிகள் 2007 இல் நிறுத்தப்படும்

(கொழும்பு)

பயிற்சியற்ற ஆசிரியர்களுக்கான ஆசிரியப் பயிற்சி வழங்கவென இணைத்துக்கொள்ளும் நடவடிக்கை இந்த வருடத்துடன் நிறைவடையவுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கமைய 2007 ஆம் ஆண்டில் நாட்டிலுள்ள அனைத்து ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளிலும் பயிற்சி நடவடிக்கைகள் நிறுத்தப்படும். இதன் பின்னர் அனைத்து ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளும் அகன்ற கல்வி மத்திய நிலையங்களாகச் செயற்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது வனவட்டுன, ராகம, பலப்பிட்டிய, கம்பளை ஆகிய சிங்கள மொழியிலான ஆசிரிய கலாசாலைகளும், அட்டாளைச்சேனை, கோப்பாய் மற்றும் கொட்டகல, சிறிபாத ஆகிய தமிழ்மொழிமூல ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளும் இந்தத் திட்டத்துக்கு உட்படுத்தப்படும்.

நாட்டில் இதுவரை பயிற்சி பெறாத 1500 ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும், இந்த விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதியெனினும் -

இதுவே இறுதிச் சந்தர்ப்பம் என்பதால், இந்தமாத இறுதிவரை கிடைக்கும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளவுள்ளதாக ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் மற்றும் கல்வி விஞ்ஞான பீடங்களின் பணிப்பாளர் மல்லிகா தர்மலதா தெரிவித்தார்.

பேராதனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் மட்டும், ஆங்கில மொழிமூலமான விசேட பயிற்சித் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. (தே)

# அரச நிறுவனங்களின் முறைகேடுகள்; விசேட விசாரணைப்பிரிவு ஆராயும்!

(கொழும்பு)

ஜனாதிபதி விசேட விசாரணைப் பிரிவு - பாடசாலைகளில் மாணவர்களின் அனுமதியில் ஏற்பட்ட முறைகேடுகள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு, மேலதிகமாக அரச நிறுவனங்கள் பலவற்றில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளைக் கண்டறிவதற்கான விசாரணைகளையும் நடத்தவுள்ளது.

இதன்படி அடுத்துவரும் இரண்டு வாரங்களுக்குள் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்படுமென இந்த விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் டபிள்யு.எம்.எம்.விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பல அரச நிறுவனங்களில் இடம்பெற்ற ஊழல் மோசடி தொடர்பான முறைப்பாடுகள் அடங்கிய கடிதங்கள் 400 இற்கும் அதிகமாக உள்ளன. ஜனாதிபதி சந்திரிகாவின் விசேட ஆலோசனையின் பேரில் கல்விச் செயற்பாடுகளில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த விசாரணைகள் முடிவடைந்ததும், மற்றைய அரச நிறுவனங்கள் மீதான விசாரணை ஆரம்பிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

(தே)

# யாழ்.கல்வி வலயமட்டத்திலான மெய்வன்மைப் போட்டி முடிவுகள்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாண கோட்ட பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட மெய்வன்மைப் போட்டிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களிடையே நடத்தப்பட்ட யாழ்.வலய மட்டத்திலான மெய்வன்மை போட்டி கடந்த 4ஆம் திகதி முதல் 6ஆம் திகதிவரை யாழ்.பல்கலைக்கழக மருத் துவ பீட மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்றவர்களின் விபரம் வருமாறு –

11 வயதுப் பெண் – 75 மீற்றர் – 1ஆம் இடம் – தர்சனா– சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, 2ஆம் இடம் – பிரியங்கா – சென்.ஜோன். பொஸ்கோ வித்தியாலயம், 3ஆம் இடம் – சுபஜெயந்தி – யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.

100 மீற்றர்–1ஆம் இடம்– துர்க்கா– நாவலர் காசிப்பிள்ளை வித்தியாலயம், 2ஆம் இடம் – பிரியங்கா – சென். ஜோன்ஸ் பொஸ்கோ வித்தியாலயம், 3ஆம் இடம் – சிந்துகௌரி – கொக்குவில் இந்துக் கல்லூரி.

உயரம் பாய்தல் – 1ஆம் இடம் – பிரியா – கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம், 2ஆம் இடம் – பிரியங்கா – சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, 3ஆம் இடம் – திவ்யா – இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

நீளம் பாய்தல் – 1ஆம் இடம் – ஜோய் கருன்ஜா – சென்.ஜோன். பொஸ்கோ வித்தியாலயம், 2ஆம் இடம் – ஜெனுஸ்கா – இந்து ஆரம்பப் பாடசாலை, 3ஆம் இடம் – துர்க்கா – நாவலர் காசிப்பிள்ளை வித்தியாலயம்.

13 வயதுப் பெண் –

100 மீற்றர் – 1ஆம் இடம் – மதுரா –திருக்குடும்ப கன்னியர் மடம் , 2ஆம் இடம் – கார்த்திகா – அத்தியார் இந்துக் கல்லூரி, 3ஆம் இடம் – ஐஸ்வரியா – சுண்டிக்குளி மக ளிர் கல்லூரி.

200 மீற்றர் – 1ஆம் இடம் – கார்த்திகா – அத்தியார் இந்துக் கல்லூரி, 2ஆம் இடம் – மதுரா – திருக்குடும்ப கன்னியர்மடம் , 3ஆம் இடம் – கம்சா – சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

நீளம் பாய்தல் – 1ஆம் இடம் – நிலூசா – பெரியபுலம் மகாவித்தியாலயம், 2ஆம் இடம் – துவாரகா – கொக்குவில் இந்துக் கல்லூரி, 3ஆம் இடம் – சுகந்தினி – சென்.றொக் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்.

உயரம் பாய்தல் – 1ஆம் இடம் – வினோதினி – வேம்படி மகளிர் கல்லூரி, 2ஆம் இடம் – மயூரா – கோப்பாய் நாவலர் வித்தியாலயம், 3ஆம் இடம் – ரதிகாந்தி – சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

4X100 – சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, 2ஆம் இடம் – திருக்குடும்ப கன்னியர்மடம், 3ஆம் இடம் – இந்து மகளிர் கல்லூரி.

17 வயது ஆண் –

1500 மீற்றர் – 1ஆம் இடம் – வியாசன் – யாழ்.மத்திய கல்லூரி, 2ஆம் இடம் – டினிஜென்சன் – யாழ்.புனித சம்பத்திரிசியார் கல்லூரி, 3ஆம் இடம் – டினோசன் – ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம்.

19 வயது ஆண் –

100 மீற்றர் – 1ஆம் இடம் – பிரசாத் – சென்.ஜோன்ஸ் கல்லூரி, 2ஆம் இடம் – சாந்தன் – யாழ். இந்துக் கல்லூரி, 3ஆம் இடம் – வாகீசன் – சென். ஜோன்ஸ் கல்லூரி.

200 மீற்றர் – 1ஆம் இடம் – வாகீசன் – சென்.ஜோன்ஸ் கல்லூரி, 2ஆம் இடம் – சாண்டில்யன் – யாழ்.இந்துக் கல்லூரி, 3ஆம் இடம் – அன்ரனஸ் – புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்.

400 மீற்றர் – 1ஆம் இடம் – விக்ரர் – புனித சம்பத்திரிசியார் கல்லூரி, 2ஆம் இடம் – சாண்டிலியன் – யாழ். இந்துக் கல்லூரி, 3ஆம் இடம் – அன்ரனஸ் – புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்.

800 மீற்றர் – 1ஆம் இடம் – கவிராஜ் – யாழ்.மத்திய கல்லூரி, 2ஆம் இடம் – விக்ரர் – புனித பத்திரிசியார் கல்லூரி, 3ஆம் இடம் – ஜெயந்திரன் – புனித பத்திரிசியார் கல்லூரி.

உயரம் பாய்தல் – 1ஆம் இடம் – சனந்தன் – யாழ்.இந்துக் கல்லூரி, 2ஆம் இடம் – ஜனுஸ்காந் – இடைக்காடு மகாவித்தியாலயம், 3ஆம் இடம் – லெட்சியசீலன் – அத்தியார் இந்துக் கல்லூரி.

நீளம் பாய்தல் – 1ஆம் இடம் – சதீஸ்குமார் – யாழ்.இந்துக் கல்லூரி, 2ஆம் இடம் – தினேஷ் – முத்துத்தம்பி மகாவித்தியாலயம், 3ஆம் இடம் – சஞ்ஜீவன் – சென்.ஜோன்ஸ் கல்லூரி.

1500 மீற்றர் – 1ஆம் இடம் – கவிராஜ் – யாழ்.மத்திய கல்லூரி, 2ஆம் இடம் – விக்டர் – புனித பத்திரிசியார் கல்லூரி, 3ஆம் இடம் – பிரதீப் – புனித பத்திரிசியார் கல்லூரி.

முப்பாய்ச்சல் – 1ஆம் இடம் – ஆதவன் – புனித பத்திரிசியார் கல்லூரி, 2ஆம் இடம் – ஜக்சன் – புனித பத்திரிசியார் கல்லூரி, 3ஆம் இடம் – திவாகர் – கொக்குவில் இந்துக் கல்லூரி.

5000 மீற்றர் – 1ஆம் இடம் – கவிராஜ் – யாழ்.மத்திய கல்லூரி, 2ஆம் இடம் – பிரசாத் – யாழ்.இந்துக் கல்லூரி, 3ஆம் இடம் – செல்வநாயகம் – யாழ்.இந்துக் கல்லூரி.

4X100 அஞ்சல் – 1ஆம் இடம் – சென்.ஜோன்ஸ் கல்லூரி, 2ஆம் இடம் – யாழ்.இந்துக் கல்லூரி, 3ஆம் இடம் – புனித பத்திரிசியார் கல்லூரி.

4X400 அஞ்சல் – 1ஆம் இடம் – புனித பத்திரிசியார் கல்லூரி, 2ஆம் இடம் – யாழ்.இந்துக் கல்லூரி, 3ஆம் இடம் – சென்.ஜோன்ஸ் கல்லூரி.

21 வயது ஆண் –

100 மீற்றர் 1ஆம் இடம் – சிவசொரூபன் – புத்தூர் சோமஸ்கந்தா, 2ஆம் இடம் – கோல்ட்பிறீட் – சென்.ஜோன்ஸ் கல்லூரி.

200 மீற்றர் – 1ஆம் இடம் – சுரேஸ்ராஜ் – யாழ்.மத்திய கல்லூரி, 2ஆம் இடம் – சிவசொரூபன் – புத்தூர் சோமஸ்கந்தா, 3ஆம் இடம் – சிறீகாந்தரூபன் – கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.

400 மீற்றர் – 1ஆம் இடம் – சுரேஸ்ராஜ் – யாழ்.மத்திய கல்லூரி.

800 மீற்றர் – 1ஆம் இடம் – அன்ரனிதாஸ் – யாழ்.மத்திய கல்லூரி, 2ஆம் இடம் – அகில்சான் – யாழ். மத்திய கல்லூரி.

1500 மீற்றர் – 1ஆம் இடம் – அன்ரனிதாஸ் – யாழ்.மத்திய கல்லூரி, 2ஆம் இடம் – அகில்சான் – யாழ். மத்திய கல்லூரி.

உயரம்பாய்தல் – 1ஆம் இடம் – தீனதர்சன் – யாழ்.இந்துக் கல்லூரி, 2ஆம் இடம் – நிரூபன் – முத்துத்தம்பி மகாவித்தியாலயம், 3ஆம் இடம் – றொபின்சன் –சென்.சாள்ஸ் மகாவித்தியாலயம்.

நீளம் பாய்தல் – 1ஆம் இடம் – கீதாஅமிர்தன் – யாழ்.மத்திய கல்லூரி, 2ஆம் இடம் – றொபின்சன் – சென்.சாள்ஸ் மகாவித்தியாலயம், 3ஆம் இடம் – ஆனந்தராஜ் – முத்துத்தம்பி மகாவித்தியாலயம்.

ஈட்டி எறிதல் – 1ஆம் இடம் – நிரூபன் – முத்துத்தம்பி மகாவித்தியாலயம், 2ஆம் இடம் – றொபின்சன் – சென்.சாள்ஸ் மகாவித்தியாலயம்.

முப்பாய்ச்சல் – 1ஆம் இடம் – கீதா அமிர்தன் – யாழ்.மத்திய கல்லூரி, 2ஆம் இடம் – சிவநிக்சன் – உரும்பிராய் இந்துக் கல்லூரி.

4X400 மீற்றர் – 1ஆம் இடம் – யாழ்.மத்திய கல்லூரி. (58)

## எனது பந்துவீச்சை குறைகூறி நிம்மதியை கெடுத்துவிட்டார்கள்

### —ஹர்பஜன்சிங் விசனம்

(ஜலந்தர்)



எனது பந்துவீச்சை குறைசொல்வதன் மூலம் என்னுடைய மன நிம்மதியையே கெடுத்துவிட்டார்கள் என்று இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் புகழ்பெற்ற சுழற்பந்து வீச்சாளராக விளங்குபவர் ஹர்பஜன்சிங். இவருடைய பந்துவீச்சு சமீபத்தில் விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டது. அவர் பந்தை சுழற்றிவீசும் முறை சரியல்ல. இதை சட்டரீதியாகவும் தடைசெய்ய வேண்டும் என்றெல்லாம் கருத்துக்கள் சொல்லப்பட்டன.

இது குறித்து ஹர்பஜன்சிங் நேற்று முன்தினம் பி.ரி.ஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது –

என்னுடைய பந்துவீச்சை குறை சொல்வதன் மூலம் என்னை குழப்புகிறார்கள். என்னுடைய மன நிம்மதியையே கெடுத்துவிட்டார்கள். சமீபத்தில் பாகிஸ்தானுடன் நடைபெற்ற தொடரில் நான் நன்றாக செயற்பட முடியாமல் போகுமளவுக்கு என்னை இது பாதித்துவிட்டது.

நான் விளையாட்டில் கவனம் செலுத்துவதற்கு பதிலாக ஐ.சி.சியின் தடையிலிருந்து விடுபடுவதற்காக காத்திருந்து, நேரத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறேன். இது எனக்கு மிகுந்த மனவருத்தத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

நான் இந்த நிலையிலும்கூட பாகிஸ்தானுக்கு எதிராக என் திறமையை நன்றாகவே வெளிப்படுத்தினேன். இருந்தாலும் மனநிலை சரியில்லாத காரணத்தால் மேலும் சிறப்பாக கவனம் செலுத்த முடியாமல் போய்விட்டது என அவர் கூறினார்.

## மேசைப் பந்தாட்டப் போட்டி!

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளரங்க விளையாட்டுக் கழகம் மக்கள் வங்கி வட வலயத்தின் அனுசரணையுடன் டொக்டர் டி.ரி.நைல்ஸ் ஞாபகார்த்தமாக நடத்தும் மேசைப் பந்தாட்டப் போட்டி நாளை காலை 9 மணிக்கு வயதுப் பிரிவினர்களுக்கும், மாலை 2 மணிக்கு வயதுக் கட்டுப்பாடு அற்றவர்களுக்கும் நடைபெறவுள்ளது.

## போட்டியில் தோல்வியடைய 1 கோடி ரூபா வாங்கினாராம்!

### ஸ்னூக்கர் வீரர்மீது குற்றச்சாட்டு

சீன ஓபன் ஸ்னூக்கர் போட்டியில் தோற்பதற்காக ஒரு கோடி ரூபா லஞ்சம் வாங்கினார் என அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த நட்சத்திர வீரர் குயின் டென் ஹான்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் அதிகம் விற்பனையாகும் தி சன் பத்திரிகையில் முதல் பக்கத்தில் இந்தச் செய்தி செவ்வாய்க் கிழமை வெளியாகியுள்ளது.

சமீபத்தில் நடைபெற்ற சீன ஓபன் போட்டியில் முன்னாள் உலக சம்பியன் கென் தோஹர்தியுடன் விளையாடினார் ஹான். அந்த ஆட்டத்தில் தோற்கவேண்டுமானால் 1 கோடி கொடுக்கவேண்டும் என ஹான் பேரம் பேசியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர்களுடைய பேரத்துக்கு ஆதாரமாக ஒளிப்பதிவு உள்ளதாகவும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

நான் 5–0 என தோற்கவேண்டுமா? 10–0 என்றுகூட தோற்கிறேன். நான் சம்பாதிக்கவேண்டும். நான் தொழிலதிபர். எதைப் பற்றியும் எனக்குக் கவலையில்லையென தோஹர்தியிடம் ஹான் நடத்திய பேச்சுவார்த்தையையும் அப்பத்திரிகை வெளியிட்டுள்ளது.


சீன ஓபனில் 2–5 என ஹான் தோல்வியுற்றார்.

வடக்கு இங்கிலாந்தில் உள்ள ஷெஃபீல்டில் நடைபெற்ற உலக கிண்ணப் போட்டியிலும் இதே மாதிரியே ஹான் தோல்வியுற்றுள்ளார்.

முன்னாள் உலக சம்பியன் பீட்டர் எப்டானிடம் 10–2 என தோல்வியுற்றுள்ளார் ஹான்.

# விளையாட்டு

## ஒலிம்பிக்கில் தோற்கடித்தவரை ஹம்பர்கில் வீழ்த்தினார் பெடரர்!



ஜேர்மனியில் ஹம்பர்க் மாஸ்டர்ஸ் ரெனிஸ் போட்டியில், ஒலிம்பிக்கில் தோற்கடித்தவரை பழிக்குப்பழி வாங்கி ரோஜர் பெடரர் வெற்றிபெற்றார்.

ஜேர்மனியில் ஹம்பர்க் மாஸ்டர்ஸ் ரெனிஸ் போட்டி நடைபெற்றுவருகிறது. நேற்றுமுன்தினம் நடந்த 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் உலகின் முதல்நிலை ஆட்டக்காரரர் ரோஜர் பெடரரும், செக் வீரர் தோமஸ் பெர்டிச்சும் மோதினார்கள்.

கடந்த 2004ஆம் ஆண்டு எதென்சில் ஒலிம்பிக் நடந்தபோது, ரெனிஸ் 2ஆவது சுற்றில் ரோஜர் பெடரர் தோற்றுப் போனார். அவரைத் தோற்கடித்தவர்தான் இந்த பெர்டிச். இப்போது பெர்டிச்சுடன் மோதும் வாய்ப்பு பெடரருக்கு இந்த ஹம்பர்க் ரெனிஸில் கிடைத்தபோது, அதை பெடரர் மிகச்சரியாகப் பயன்படுத்திக் கொண்டார்.

ஆரம்பத்தில் இருந்தே பெடரரின் கைதான் ஓங்கியிருந்தது. 19 வயதான இளம் வீரர் பெர்டிச்சை தனது அனுபவம் மிகுந்த ஆட்டத்தால் பெடரர் எளிதாக வீழ்த்திவிட்டார். அவர் 6–2, 6–1 என்ற செட் கணக்கில் 53 நிமிடத்திலேயே வெற்றிக் கனியைப் பறித்தார்.

எதென்ஸ் ஒலிம்பிக்கில் தன்னைத் தோற்கடித்த பெர்டிச்சை வெற்றிகொண்டதன் மூலம் பெடரர் பழிக்குப்பழி வாங்கிவிட்டார். பெடரர் இந்த ஆண்டு 39 போட்டிகளில் விளையாடியுள்ளார். அதில் அவர் பெற்ற 37ஆவது வெற்றி இதுவாகும்.

நேற்றுமுன்தினம் 2ஆவது சுற்று ஆட்டத்தில் ஸ்பெயின் வீரர் டாமி ரோபிரடோ 6–3, 6–0 என்ற செட் கணக்கில் பிரேசில் வீரர் குஷ்தாவோ குயர்ட்டனை வென்றார். குயர்ட்டன் 3 முறை பிரெஞ் ஓபன் ரெனிஸ் சம்பியன் பட்டத்தை வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்த சுற்று ஆட்டத்தில் ரோஜர் பெடரரும், டாமி ரோபிரடோவும் மோதவுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மற்றொரு 2ஆவது சுற்று ஆட்டத்தில் இங்கிலாந்து வீரர் டிம் ஹென்மேன் 7–6, 6–4 என்ற செட் கணக்கில் தனது நாட்டு வீரர் கிரேக் ரூசிட்ஸ்கியை வென்றார். இன்னொரு ஆட்டத்தில் ஆர்ஜென்ரீன வீரர் ஜுவான் இக்னோசியாசிலா 6–1, 6–4 என்ற செட் கணக்கில் சுவீடன் வீரர் ராபின் சோடர்லிங்கை வீழ்த்தினார். 3ஆவது சுற்று ஆட்டத்தில் ஜுவானும், டின் ஹென்மேனும் மோதவுள்ளனர்.

## இந்திய வீராங்கனைகளின் தண்டனைக்காலம் குறைப்பு!

(புதுடெல்கி)

எதென்ஸ் ஒலிம்பிக் பளுதூக்கும் போட்டியில் போதை மருந்து உபயோகப்படுத்திய 3 இந்திய வீராங்கனைகளுக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தடை ரத்துச்செய்யப்பட்டு 2 ஆண்டு தண்டனையாகக் குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2004ஆம் ஆண்டு எதென்ஸ் ஒலிம்பிக் நடந்தபோது இந்திய பளுதூக்கும் அணியும் போட்டிகளில் கலந்துகொண்டது. அதில் பங்கேற்ற 3 வீராங்கனைகள் தடை செய்யப்பட்ட போதை மருந்துகளை உட்கொண்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

பிரதிமா குமாரி, சனமச்சா, சுனைனா ஆகிய இந்த 3 வீராங்கனைகள் மீதும் விசாரணை நடத்தப்பட்டது. அதன் பின்பு 3 பேருக்கும் ஆயுட்காலத் தடையை இந்திய பளுதூக்கும் பெடரேஷன் விதித்தது.

இதற்கிடையே அந்த 3 பேருடைய தண்டனையை குறைக்கும்படி இந்திய பளுதூக்கும் பெடரேஷனுக்கு இந்திய ஒலிம்பிக் சங்கம் பரிந்துரை செய்தது. அதை ஏற்றுக்கொண்டு 3 பேரின் தண்டனையைக் குறைக்க இந்திய பளுதூக்கும் பெடரேஷன் சம்மதம் தெரிவித்துள்ளது.

இது குறித்து இந்திய பளுதூக்கும் பெடரேஷனின் பொதுச் செயலாளர் பல்பீர் சிங் பாட்டியா கூறுகையில் –

இந்திய ஒலிம்பிக் சங்கம் 3 வீராங்கனைகளுடைய ஆயுள்காலத் தடையைக் குறைக்கும்படி பரிந்துரை செய்து அனுப்பிய கடிதம் எங்களுக்கு சமீபத்தில் கிடைத்தது. அதை ஏற்று அவர்களுடைய ஆயுள்காலத் தடையை ரத்துச்செய்யவும், அதை 2 ஆண்டு கால தடையாகக் குறைக்கவும் முடிவு செய்துள்ளோம்.

எதென்ஸ் ஒலிம்பிக்கின்போது தடை செய்யப்பட்ட போதை மருந்தை பிரதிமா குமாரியும், சனாமச்சாவும் 2 முறை உட்கொண்டிருந்தார்கள் என்பது நிரூபிக்கப்பட்டிருந்தது. எனவே அவர்களின் பிரச்சினை பற்றி இறுதி முடிவெடுக்க இந்திய பளுதூக்கும் பெடரேஷனின் நிர்வாகக் குழுக்கூட்டம் விரைவில் நடைபெறும். பொதுவாக போதை மருந்து 2ஆவது முறையும் சாப்பிட்டு சிக்கிக்கொண்டால், ஆயுள்காலத் தடை விதிக்கப்படுவதுதான் நடைமுறை விதியாக உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## சதுரங்கப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான சதுரங்கப் போட்டி – யாழ். இந்துக் கல்லூரியில் நாளை காலை 8.30 மணிக்கு 19 வயதுக்குட்பட்ட ஆண், பெண் போட்டியாளர்களுக்கும், 16ஆம் திகதி பிற்பகல் 2.45 மணிக்கு 15 வயதுக்குட்பட்ட ஆண், பெண் போட்டியாளர்களுக்கும் நடைபெறவுள்ளதாக யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் தி.செல்வரட்ணம் தெரிவித்தார்.

# கழிவுகளைக் கொட்டுவதனால் வெள்ளவாய்க்கால் மூடப்படுகிறது

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை அராலி வீதியில் உள்ள வெள்ளவாய்க்கால் - அந்தப் பகுதியில் உள்ளவர்களின் பொறுப்பற்ற செயலால் மூடப்பட்டுவருவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் ஜெ.சீனிவாசன் தெரிவித்தார்.

தெல்லிப்பளை அராலி வீதியில் உள்ள வெள்ளவாய்க்காலை புனரமைப்புச் செய்துதருமாறு பண்டத்தரிப்பு கமக்காரர் அமைப்பினால் அண்மையில் விடுக்கப்பட வேண்டுகோளுக்கு பதிலளிக்கையிலேயே பொறியியலாளரால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

இந்த வெள்ள வாய்க்கால் ஒவ்வொரு வருடமும் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றது. ஆனால், அந்தப் பகுதியில் அமைந்துள்ள வீடுகள், வியாபார நிறுவனங்கள் தமக்கு முன்னால் செல்லும் வாய்க்காலை மூடி வருகின்றனர்.

இந்த வருடமும் இந்த வாய்க்கால் வெட்டப்பட்டு வருகின்றது. இவ்வாறு வெட்டப்படும் வாய்க்காலை மூடிவிடாமல் அந்தப் பகுதி கமக்காரர் அமைப்புக்களே பாதுகாக்கவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(44)

# நல்லைக் குமரன் நூலுக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன

நல்லூர்கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற சைவ சமய விவகாரக் குழு வருடாவருடம் நல்லைக்குமரன் என்ற பெயரில் ஆக்கபூர்வமான மலர் ஒன்றை வெளியிட்டு வருகின்றது.

இந்த வரிசையில் எதிர்வரும் வருடாந்த உற்சவத்திற்கான 13 ஆவது மலர் வெளியிடப்படவுள்ளது. இந்த வருடம் வெளியிடப்படவுள்ள இந்த மலருக்கு உகந்ததும், காலத்தின் தேவைக்கு ஏற்றதுமான தலைப்பில் தரம் மிக்க ஆக்கங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவுக்கு அனுப்பி வைக்குமாறு துறைசார்ந்த அறிஞர்கள், சைவப் பெரியோர்கள் மற்றும் கல்விமான்களிடம் கோரப்பட்டுள்ளது

இந்தமுறை நல்லைக்குமரன் மலருக்கான பிரதான தொனிப்பொருள் மாநகராட்சிமன்ற பிரதேசத் திருக்கோயில்கள் என்பதாகும். இது தவிர்ந்த ஏனைய தரமான கட்டுரைகளும் கோரப்படுவதாக கலாநிதி க.குணராசா அறிவித்துள்ளார்.

# திருமறைக் கலாமன்றத்தில் ஓவியக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்ற கவின் கலைப் பயிலக ஓவியக் கலை வட்ட மாணவர்களின் 'கடல் வரைந்த ஓவியக் கண்காட்சி' நக்கா வீதியிலுள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலா முற்றத்தில் நாளை காலை 10 மணிக்கு ஆரம்பமாகி 21ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

தினமும் காலை 10 மணிமுதல் மாலை 5 மணிவரை இந்த இலவச ஓவியக் கண்காட்சியை பார்வையிட முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

சுனாமியின் பாதிப்புக்களைப் பிரதிபலிக்கும் இந்த ஓவியக் கண்காட்சியில் - ஓவியக் கலைவட்ட இளம் ஓவியர்கள் நேரடியாக தமது பதிவுகளை ஓவியங்களாக காட்சிப்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த மாதம் தென் பகுதியில் இடம் பெற்ற கடல் வரைந்த ஓவியக் கண்காட்சி மிக விரைவில் முல்லைத்தீவின் பல பகுதிகளிலும், வடமராட்சிப் பகுதிகளிலும் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (91)

# முகாமைத்துவ மன்றம் நடத்தும் பொதுஅமைப்பு வினாடிவினா!

(யாழ்ப்பாணம்)

சமூகம் சார்ந்த பொது நோக்கு கருதி யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர் மன்றம் பாடசாலை மாணவரிடையே பொது அறிவு வினாடிவினாப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

உயர்தரப் பாடத்திட்டத்தில் பொது அறிவு ஒரு பாடமாக உள்ளடக்கப்பட்டுள்ளதால், உயர்தர மாணவர்களின் பொது அறிவுத்திறனை வளர்ப்பதில் இந்த மன்றம் முனைப்புக் கொண்டுள்ளது.

முதலாவது போட்டியாக வலய மட்டப் போட்டிகள் இன்று காலை 9மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் - மன்றத் தலைவர் ம.மோகன் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டியை யாழ். பல்கலைக்கழக முகாமைக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி ம.நடராஜசுந்தரம் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

யாழ். வலயப் போட்டிகள் யாழ். மத்திய கல்லூரியிலும், வலிகாமம் வலயப் போட்டிகள் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலும், வடமராட்சி வலயப் போட்டிகள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், தென்மராட்சி வலயப் போட்டிகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், தீவக வலயப் போட்டிகள் வேலணை மத்திய கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

# காணாமற் போனோரின் குடும்பங்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவ வேண்டும்

## காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் கோரிக்கை

வடபகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமல் போனவர்களின் குடும்பங்களை அரச சார்பற்ற நிறுவனங்கள் கவனத்திலெடுத்து உதவிபுரியவேண்டுமென காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் கேட்டுள்ளது.

இது குறித்து பாதுகாவலர் சங்கம் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் -

காணாமல்போனோர் குடும்பங்கள் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளன.

யுத்த காலத்தில்,சேதமாக்கப்பட்ட வீடுகளைத் திருத்த முடியாமலும் - இருக்க இடமில்லாமலும் வறுமைக் கோட்டின் கீழுள்ள இந்தக் குடும்பங்கள் பலத்த சிரமங்களை எதிர்நோக்குகின்றன.

இந்தக் குடும்பங்களிலுள்ள சிறுவர்கள் கல்வி வளர்ச்சி குன்றியவர்களாகவும், போஷாக்கற்றவர்களாகவும் உள்ளனர்.

இவர்களுக்கு உதவுவதற்கு இதுவரை காலமும் எந்தவொரு அரசசார்பற்ற நிறுவனங்களும் 'முன்வரவில்லை. எனவே, இந்தக் குடும்பங்களைக் கவனத்திலெடுத்து அவர்களுக்கு உதவ முன்வரவேண்டுமென கோரப்பட்டுள்ளது.

## மஹோற்சவப் பெருவிழா

சாவகச்சேரி சப்பச்சி மாவடி அருள்மிகு விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவ பெருவிழா நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த் திரு விழாவும், மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

சங்கத்தானை சிறிகுமார ஸ்ரீகாந்த குருக்கள் மற்றும் ஆலய குரு சரசாலை பிரம்மஸ்ரீ ந.லோகேஸ்வர சர்மா ஆகியோர் தலைமையில் இடம்பெறவுள்ளது.

# முகாமைத்துவ மென்பொருள் தொடர்பான பயிற்சி செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

இடைநிலைக் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளின் அதிபர்களுக்கும், தகவல் தொழில்நுட்பத்துக்குப் பொறுப்பான ஆசிரியர்களுக்குமான பாடசாலை முகாமைத்துவ மென்பொருள் தொடர்பான பயிற்சிச் செயலமர்வு எதிர்வரும் 16 ஆம் திகதி யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்தார்.

இந்த செயலமர்வில் யாழ். மத்திய கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி , சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி மகாஜனக் கல்லூரி அதிபர்களையும், ஒரு பாடசாலைக்கு ஒரு ஆசிரியர் வீதம் பொருத்தமான ஒரு ஆசிரியரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# மறவன்புலவு மாரியம்மன் ஆலயத்தில் வழிபாட்டுக்கு படையினர் அனுமதி

(மறவன்புலோ)

சாவகச்சேரி மறவன்புலவு மத்தி செல்வமுத்து மாரி அம்பாள் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 17 ஆம் திகதியன்று நவகுண்ட அபிஷேகமும், குளிர்த்தியும் நடைபெறவுள்ளன.

இந்த ஆலயம் உயர்பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் இருப்பதால் அங்கு சென்று பூசை வழிபாடுகள் நடத்த இதுவரை காலமும் படைத்தரப்பு அனுமதி வழங்கவில்லை.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச் சந்திரன் எடுத்த முயற்சியை அடுத்து ஏப்ரல் 23 ஆம் திகதியன்று ஆலய சுற்றாடலைப் பார்வையிட்ட படை அதிகாரிகள் பூசை வழிபாட்டுக்கு அனுமதி வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# பண்டத்தரிப்பு பத்திமா அன்னை ஆலய திருநாள் விழா

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பத்திமா அன்னை திருத்தலத்தில் திருவிழா இன்று காலை 7.30 மணிக்கு புதிய குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதேவேளை கடந்த மே 4 ஆம் திகதி முதல் ஆரம்பமான நவநாள் வழிபாடுகள் மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி, திருப்பலி நடைபெற்று வந்தது. நவநாட்களுக்கான மறையுரையை அருட்திரு ஜெ.ஜெரோம் லெபேட் (அ.ம.தி) வழங்கினார்.

திருநாள் முதல் திருப்பலி காலை 6 மணிக்கு அருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையிலும், திருநாட் திருப்பலி காலை 7.30 மணிக்கு புதிய குருக்கள் தலைமையிலும், மதியம் 12.00 மணிக்கு நோயாளர்களுக்கான திருப்பலி அருட்திரு பொனிபஸ் தலைமையிலும் , மாலை 4.30 மணிக்கு இளைஞர் யுவதிகளுக்கான திருப்பலி அருட்திரு றெஜிராஜேஸ்வரன் தலைமையிலும் - மாலை 6 மணிக்கு நற்கருனை ஆசீர்வாதமும் நடைபெறவுள்ளது.

## சுற்றுவட்டம் புனரமைப்பு

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் பிரதம தபாலகத்துக்கு அருகில் உள்ள சுற்றுவட்டம் புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றுவட்டம் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் இருந்து வந்தது. இதற்கு அருகில் பிரதம தபாலக கட்டடம் மற்றும் முக்கிய அலுவலகங்கள் இயங்கி வருவதால் இந்தச் சுற்றுவட்டம் புனரமைக்கப்பட வேண்டிய தேவை நீண்ட நாட்களாக இருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாணவர்களுக்கான கல்வித் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யுனிசெப் நிறுவனமும், நீடோ நிறுவனமும் இணைந்து அனைத்து மாணவர்களுக்குமான வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. இதன் முதற்கட்டமாக வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பின்தங்கிய கிராமங்களில் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டம் மே மாத ஆரம்பத்தில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது. இதில் பாடசாலை செல்லாத மாணவர் மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி மீண்டும் பாடசாலை கல்வியில் இணைத்தலே முக்கிய நோக்கமாகும்.



சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடத்தின் 22 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட சமய இலக்கியப் போட்டியில் 3 ஆம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன் தியாகலிங்கம் சேந்தனுக்கு - தென்னிந்திய நடிகர் சரத்பாபு வெண்கலப் பதக்கத்தையும், சான்றிதழையும் வழங்குவதைப் படத்தில் காணலாம். (48)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இகளை இநு




பெயர் : உ.துவாரகன்
முகவரி : இணுவில்.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்

சைவப்புலவர் வ.கந்தசாமிக்கு யாழ்.மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவினரால் நடத்தப்பட்ட சேவை நயப்பு வைபவத்தின் போது சைவப்புலவர் வ.கந்தசாமி உரை நிகழ்த்துவதையும், அருகில் மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசாவையும் படத்தில் காணலாம்.



சிநேகிதியே

# நல்லவனாவதும் தீயவனாவதும்

எல்லாப் பெற்றோர்களுக்கும் தங்கள் குழந்தைகள் பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடையவேண்டும். அறிவுள்ளவர்களாக விளங்க வேண்டும் என்ற ஆசையிருக்காதா?

இதற்கு நீங்கள் செய்யவேண்டிய முதல் காரியம் - ரீ.வி பார்ப்பதை அடியோடு தவிர்க்க வேண்டும். ரீ.வி பார்ப்பது கண்ணைக் கெடுப்பதோடு, உடலிலும் பல பக்க விளைவுகளை ஏற்படுத்துகிறது. சிலர் செய்தியை மட்டுமாவது ரீ.வியில் பார்க்க நினைக்கின்றனர். அதுவும் தவறுதான்.

செய்திகளை ரீ.வியில் பார்ப்பதால், குழந்தைகளிடம் சிந்தனை மேலோட்டமாகவே நின்றுவிடுகிறது. அதே செய்தியை பத்திரிகையில் வாசிக்கச் சொன்னால் குழந்தைகளின் சிந்தனைத் திறன் வளர்வதோடு- ஞாபகசக்தியும், படிக்கும் பழக்கமும் அதிகரிக்கும். இது விஞ்ஞான பூர்வமான உண்மை.

எனவே உங்கள் குழந்தைகளுக்காக நீங்கள் ஏதாவது ஒரு கெட்ட பழக்கத்தைவிட வேண்டும். முதலில் ரீ.வி பார்ப்பதை விட்டுவிடுங்கள்.

குழந்தைகள் எதிரில் பெற்றோர்கள் சண்டையிடுவதோ, தங்களின் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதோ குழந்தைகளின் மனதில் ஓர் எதிர்மறை உணர்வை உண்டாக்கி, படிப்பில் ஆர்வத்தைக் குறைத்து விடும்.

குழந்தைகள் இரவில் தூங்கப்போகும்போது அவர்களுக்கு நல்ல அறிவூட்டும் கதைகளைக் கூறலாம். உதாரணமாக - பெரிய விஞ்ஞானிகள் எப்படி சிறிய விடயங்களையும் கூர்ந்து, கவனித்து, ஆராய்ந்து, புதிய கண்டுபிடிப்புகள் செய்தனர் என்பனவற்றைச் சொல்லலாம். இந்த விடயங்களைக் கேட்டுக்கொண்டே அவர்கள் உறங்கி விட்டாலும், அந்தக் கருத்து அவர்களின் ஆழ்மனதில் பதிந்துவிடும்.

குழந்தைகளுக்கு நிறையப் புத்தகங்கள் பத்திரிகைகளை வாங்கிக் கொடுத்து படிக்கச் சொல்லுங்கள். குடித்துவிட்டுக் கும்மாளம் போடும் அயல் வீட்டார், பொறுப்பற்று ஊர்சுற்றும் உறவினர்கள் போன்ற சூழலையும் குழந்தைகள் தவிர்ப்பது அவசியம்.

குழந்தைகளுக்குள்ள ஆர்வத்தையும், திறமையையும் கண்டறிந்து, அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். உதாரணமாக - ஓவியம், இசை, படிப்பு போன்றவற்றில் அவர்களை ஊக்குவிக்கவேண்டும்.



வீட்டில் உள்ளவருக்கோ அல்லது வீட்டுக்கு வருபவர்களுக்கோ மது, சிகரட் போன்ற பழக்கங்கள் இருந்தால் விட்டுவிட வேண்டும். இல்லையேல் குறைந்தபட்சம் இந்தப் பழக்கங்களை குழந்தைகளுக்குத் தெரியாதவாறு பார்த்துக்கொள்ளவேண்டும்.

குழந்தைகளுக்குப் பரீட்சை நடக்கும் சமயங்களில் விருந்தினர்கள் வீட்டுக்கு வருவதைத் தவிர்ப்பது நல்லது. காரணம் -விருந்தினர் வருகையால் பெற்றோர்கள் குழந்தைகளைக் கவனிக்கும் நேரம் குறைவதோடு, குழந்தைகளின் கவனமும் சிதற வாய்ப்புண்டு.

குழந்தைகளுக்கு ஏழு அல்லது எட்டு வயதானதிலிருந்து தினமும் ஒரு பக்கம் ஏதாவது அவர்களுக்குத் தெரிந்த தலைப்பொன்றைக் கொடுத்து எழுதச் சொல்லுங்கள்.

# குழந்தைப் பேறு இல்லாமல் போவதற்கு ஆண்களும் காரணம்!



(சென்றவாரத் தொடர்ச்சி...)

சிலவகை நோய்த் தொற்றுக்களும் கூட மலட்டுத் தன்மையை ஏற்படுத்தலாம். உதாரணமாக - நெருப்புக் காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டவருக்கு இவ்வாறான மலட்டுத்தன்மை ஏற்படலாம். இந்த நோயால் விந்தணுக்களின் எண்ணிக்கை குறைந்து அல்லது விந்தணுக்களின் தரம் குறைந்து போய் குழந்தைப்பேறு இல்லாமல் போக வாய்ப்பு ஏற்படுகிறது. இது தவிர விந்துக்களின் தரம் மற்றும் அளவு ஆகியவற்றாலும் குழந்தைப் பேறு வெகுவாகப் பாதிப்படையச் செய்யலாம்.

சில ஆண்களுக்கு முறையான விதத்தில் உறவு வைத்துக் கொள்ளும் முன்னரே விந்து வெளியேறிவிடும். மன அழுத்தத்தாலும் இவ்வாறு நிகழ்கிறது. சில சமயங்களில் குறிப்பிட்ட சில ஆண்களின் விந்துக்களுக்கு எதிரான எதிர்ப்பணுக்கள் அவர்களுடைய உடலிலேயே உருவாகி விடுகிறது. இதனால் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்வதுண்டு.

இதற்குச் சரியான சிகிச்சை எடுத்து சரி செய்து விடலாம். விந்தணுக்கள் மற்றும் அந்தக் குறிப்பிட்ட எதிர்ப்பணுக்களை மருந்தின் மூலம் பிரிப்பதற்கு சிகிச்சைகள் உண்டு. பயப்பட ஒன்றுமில்லை.

இன்னும் சிலருக்குப் பிரச்சினைகள் மிகவும் சாதாரணமானதாக இருக்கலாம்.

தம்பதியரை விசாரித்தால் தான் இது தெரியவரும். இவர்கள் ஒரு மாதத்தில் மொத்தத்தில் இரண்டு தரம் தான் உடலுறவு கொண்டிருப்பார்கள். அது அந்தப் பெண்ணின் சினை முட்டை வெளிவரும் சமயத்தில் உறவு நடக்காததால் கூட குழந்தைப்பேறு தள்ளிப் போக வாய்ப்புண்டு. இது போன்ற சாதாரண விடயங்களிலும் பிரச்சினைகள் பெரிதுபடுத்தப்படுகிறது. எதற்கும் மருத்துவரை அணுகி ஆலோசனை பெறுவது தான் சிறந்தது. ◆

# பிறந்த குழந்தை உலகை இனங்காணல்

பிறந்த குழந்தையொன்று உலகத்தை இனங்காணுவதற்கு 15 மணித்தியாலங்கள் செல்வதாக பிரித்தானிய மனோதத்துவ நிபுணர்களின் பரிசோதனை மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. 15 மணித்தியாலங்கள் சென்றபின் தன்னுடைய தாயை குழந்தை இனங்காண முடியும். அதேபோல் 16 மணித்தியாலங்கள் கடந்தபின் தன்னருகே வரும் அனைவரையும் இனங்காணுவதோடு கை, கால் அசைத்தல் போன்ற பௌதீக செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன என பிரித்தானியாவில் மனோதத்துவ நிபுணர்களின் பரிசோதனைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோல் வடிவு என்பது கண்களில் அல்ல மூளையில்தான் இருக்கிறது என அவர்கள் மேலும் தெரிவித்தனர். இதன்படி குழந்தைகள் வடிவான பொருட்களைக் கண்டால் விரைவாக அதன் மனதை இழுத்துக்கொள்ளும் தன்மை அவர்களிடம் இருக்கும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இதனால்தான் குழந்தை பார்வையிடக்கூடிய இடங்களில் பல நிறங்கொண்ட பொருட்களை வைக்கின்றார்கள். இவ்வாறான பொருட்களை குழந்தைகள் கண்டவுடன் அவர்களின் உடல் உறுப்புகள் செயற்பட ஆரம்பிக்கின்றன. உதாரணமாக பொருட்களை கையில் பிடிக்க முயற்சித்தல், பொருட்களைக் கண்டவுடன் சத்தம் போடுதல் போன்ற பல செயற்பாடுகளைக் கூறலாம்.

# அகநிலை மாற்றத்தின் அவசியம்



(சென்றவாரத் தொடர் ச்சி...)

ஒருகாலத்தில் இருந்ததுபோல பெண் இன்று இனவிருத்தி செய்யும் இயந்திரமாக இல்லை. 'ஈன்றுபுறந்தருதல் என் தலைக் கடனே' என்று கூறி ஒதுங்கிவிட இன்றைய பெண்கள் தயாரில்லை.

பெண்கள் இன்று பலதுறைகளிலும் உள்நுழைந்து சாதனை படைக்கும் தைரியத்தோடு இருக்கின்றார்கள். சிறுவயது முதலே பெண்பிள்ளைகளின் ஆற்றல்கள் இனங்காணப்பட்டு, அவை தட்டிக் கொடுக்கப்படுவது நல்லது. இவ்வாறு தட்டிக் கொடுக்கப்படும்போது, பெண்பிள்ளைகள் தாமும் முன்னேறி சமுதாயத்தையும் முன்னேற்றும் முயற்சிகளிலும் ஈடுபடலாம்.

'ஏட்டையும் பெண்கள் தொடுவதிழுக்கென எண்ணியிருந்த வர் மாண்டு விட்டார்' என்று பாரதி போல நாமும் இறும்பூதெய்தும் காலமிது. எனினும் ஆங்காங்கே பெண்கள் மீதான வன்முறைகள், பெண்களைச் சிறுமைப்படுத்தும் சம்பவங்கள் நிகழத்தான் செய்கின்றன.

காலங்காலமாக சடங்கு சம்பிரதாயங்களுக்குள் கட்டுண்டு கிடக்கும் பெண்களால் அவற்றை உடைத்துக் கொண்டு வெளிவர முடிவதில்லை. இதனாலேயே மீளவும் மீளவும் அவற்றிலிருந்து விடுபட முடியாமல், அதே சடங்கு சம்பிரதாயங்களுள் மூழ்கிவிடுகின்றனர் .

முன்னெப்போதையும்விட தற்போது பெண்கள் பொருளாதாரப் பலம் பெற்றுள்ளனர். எனினும், மக்களிடம் அறிவியல் சிந்தனைகளற்ற ஆடம்பர உணர்வுகள் மேலோங்கி, இவர்களை அதல பாதாளத்துக்கு இட்டுச் செல்கின்றன. ஒருவரை ஒருவர் மிஞ்ச வேண்டும் என எண்ணுகின்ற மனிதாபிமான மற்ற சிந்தனைகள் இவர்களைத் திசை திருப்புகின்றன.

ஐம்பத்தைந்து வயதுடைய ஒரு ஐயா குறிப்பிட்டார் - தனது பேர்த்தி தனக்கு எப்படி எப்படியெல்லாம் பூப்புனிதநீராட்டுவிழா செய்ய வேண்டும் என இப்பொழுதே திட்டம் போடுகிறாளாம் என்று. அதாவது - பிஞ்சுக்குழந்தைகளின் மனங்களில்கூட இந்தப் பழமைவாத பிற்போக்குச் சிந்தனைகள் ஆழமாக வேருன்றி விட்டன என்பதன் அறிகுறியே இதுவாகும்.

பருவமடைதல் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாக இருக்க, இந்தச் சடங்கு சம்பிரதாயங்கள் பெண்பிள்ளையை மட்டும் அம்பலத்தில் நிற்கவைக்கிறது. சடங்கு சம்பிரதாயங்களின் விளைவாக இளம் பெண்பிள்ளையின் மனதில் "கற்பு" என்னும் பாரிய சுமை சுமத்தப்படுகிறது.

தன் உடலில் ஏற்பட்டிருக்கும் மாற்றம் இயற்கையானது, அவசியமானது. இதையிட்டு அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்று நினைக்கவேண்டிய பெண்பிள்ளை - மாறாக தனக்கு ஏதோ நடக்கக்கூடாதது நடந்து விட்டதாக நினைத்து பதற்றமடைகிறாள். இதனால் உளச் சமநிலை பாதிக்கப்படுகிறது.

தான் யாருடைய பாதுகாப்பிலாவது வாழ வேண்டியவள் என நினைக்கிறாள். தனியே நடமாடவோ, தனியே இருக்கவோ அஞ்சுகிறாள். தன்னை யாராவது உற்றுநோக்கினால் ஒடுங்கிப்போய் விடுகிறாள். கற்றலில், அல்லது வேறு முன்னேற்றச் செயற்பாடுகளில் செலுத்தவேண்டிய கவனத்தை, வெவ்வேறு சிந்தனைகளிற் செலவிடுகிறாள். இவற்றுக்கெல்லாம் காரணமாக சம்பிரதாயங்களும், பழமைவாதங்களும் அமைகின்றன. மிகவும் நுணுக்கமாக அவதானிக்கும் பொழுது, பெண்பிள்ளைகளின் இத்தகைய மனநிலையைப் புரிந்துகொள்ள முடியும்.

கடந்தகாலத்துப் பெண்களின் வாழ்க்கை முறைகள் பல, மிகவும் ஆபத்தானவையாக இருந்தன. கடந்த காலங்களில் மிகவும் குறைந்த வயதில் திருமண பந்தத்தில் நுழையும் அவலமிருந்தது. இளம் வயதில் துணைவனை இழந்தாலும், மறுமண வாய்ப்பின்றி கைம்மைக்கோலம் காக்கவேண்டிய துயரமிருந்தது. பொருளாதாரத்தில் யாரையாவது சார்ந்திருக்கவேண்டிய நிலை இருந்தது.

ஆனால், இன்று அவ்வாறெல்லாம் இல்லை. எனினும், இன்னமும் விடுபட முடியாதபடி, உதறி எறிந்து விட முடியாதபடி சம்பிரதாயங்களும், பழமை வாதங்களும் பின்னிக்கிடக்கின்றன. பெண் - ஆற்றல்கள் மிக்கவள். பெண் பெருமைக்குரிய வள் என்பதை உணர்ந்து கொள்ள அல்லது உணர்த்த இவை அனுமதிப்பதில்லை.


உளவியலை உணர்ந்துகொண்டு - இத்தகைய பழமைபேணும், பின்னடைவுதரும் சம்பிரதாயங்களை உடைத்தெறிகின்ற அகவலிமையைப் பெண்பிள்ளைகளுக்கு ஊட்டவேண்டியிருக்கிறது. அகவலிமை என்பது - வெறுமனே புறநிலைமாற்றங்களால் ஏற்படுவதல்ல.

சிறு பருவத்திலிருந்தே "எட்டுத் திக்கும் முரசு கொட்டுவோம்" என்ற தைரியத்துடனான வளர் சூழ் நிலையால் உருவாகுவதாக உள்ளது. சூழல் மனிதர்களின் ஆளுமையில் பெரும் பங்கு வகிக்கிறது. நிச்சயமாக அடக்கி ஒடுக்கப்படும் சூழலில் வளரும் பெண் பிள்ளைகளானாலும் சரி, ஆண் பிள்ளைகளானாலும்சரி ஆரோக்கியமான அகநிலையைப் பெற்றுக் கொள்ள முடியாது. எனவேதான் சூழலும், அறிவும், ஆற்றலும் மிகப்பெரும் காரணிகளாகக் கருதப்படுகின்றன.

போலித்தனமான மூடத்தனமான சடங்கு சம்பிரதாயங்களை உதறி எறிந்து, ஆரோக்கியமாக நிமிர்ந்து நிற்பதற்கு அகநிலை களில் மாற்றம் அவசியமாகிறது.

(தொடரும்...)

ஆதிலட்சுமி சிவகுமார்



# சுனாமி - ஒரு கடல் காவியம்

மனோன்மணி சண்முகதாஸ்

## (07 ஆம் அத்தியாயம்)

நான்தான் முதலில் காரை விட்டிறங்கினேன். பிறகு அம்மா மெல்ல இறங்க ... மீசைக்கார மாமா அவசரமாக அம்மாவுக்குக் கிட்ட வந்து, அவ இறங்க உதவி செய்தார். அதற்கிடையில் புயல் காற்றுப்போல ஓடிவந்த அப்பா ... அவரைத் தன் கைகளால் தள்ளினார். அவர் எதிர்பாராத இந்தத் தாக்குதலால் நிலைகுலைந்து போனார். என்றாலும் விரைவாகச் சமாளித்துக்கொண்டு அம்மாவைப் பார்த்தார். தெருவிளக்கின் ஒளியில் நான் அப்பாவின் முகத்தைப் பார்த்தேன். முகம் தக்காளிப்பழம் போல வீங்கிக் கிடந்தது. கண்கள் இரண்டும் இரத்தம் போலச் சிவந்து கிடந்தன! ... அடுத்த கணம் அப்பாவின் கைகள் அம்மா வின் கொண்டையைப் பற்றித அவளைக் கீழே விழுத்தின... ஐயோ... அம்மா!... அம்மா!

நான் அலறினேன்!

தேவடியாள்!...உன்னைத் துலைச்சுப் போட்டுத்தான் மற்ற வேலை! அப்பா சொன்னது மட்டுமல்ல! கீழே மல்லாக்காக விழுந்து கிடந்த அம்மாவைக் கால்களால் உதைத்தார்.

ஐயோ ! கடவுளே ! என்னைக் காப்பாற்று!

அம்மா அலறினாள்.

நானும் அவளோடு சேர்ந்து கத்தினேன்! மீசைக்கார மாமா சும்மா நிற்கவில்லை. அப்பாவின் கால்களை மேலும் உதைக்கவிடாமல் தள்ளி விட்டார். அப்பாவுக்கு கோபம் தலைக் கேறிற்று .

அம்மாவையும் ஒரு முறை உற்றுப் பார்த்தார். மறுகணம் கீழே எழும்ப முயற்சி செய்த அம்மாவைத் தன் காலால் எட்டி உதைத்தார். அது அவள் வயிற்றில் பட, வீரிட்டுக் கத்தினாள். நான் வீட்டுக்குள் ஓடிப்போனேன். எதிரே சத்தம் கேட்டு வெளியே வந்த பெத்தாவின் மேல் மோதிக்கொண்டேன்.

பெத்தா!..... பெத்தா!...

அதற்கு மேல் ஒன்றும் பேசத் தோன்றவில்லை. அவவின்ர கையைப்பிடித்த படி வாசலுக்கு இழுத்துச் சென்றேன்.

'ஐயோ என்ர ராசாத்தி!....'

பெத்தா குரல் கொடுக்க ஊரே கூடி விட்டது. ஆனால் அப்பாவின் கோபம் திசை திரும்ப மீசைக் கார மாமாவின் மேல் பாய்ந்தார். அவர் வாயில் இருந்து வசை மொழி கிளம்பிற்று.

நாய்ப்பயல் ! ஊர்ப் பெண்டுகளை மேய்ஞ்சி திரியிறாய் ! மீசைக்கார மாமாவும் சும்மா நிற்கவில்லை.

ஓசியிலை குடிச்சுப்போட்டு ஆட்டம் போடுறாய்! கவனமாய் இரடா!

"என்னடா செய்வாய்?"

அப்பா கைகளை முறுக்கியபடி முன்னே போய் மீசைக்கார மாமாவின் முகத்தில் குத்தினார். அவருடைய கண்ணாடி பறந்தது. அதற்கிடையில் அப்பாவை யாரோ தள்ளிக் கொண்டு போனார்கள்!

பெத்தா - அம்மாவை மெல்ல எழும்பி இருக்க வைத்தாள். அம்மா வலியால் துடித்தாள். நான் அவள் கைகளை ஆதரவாகப் பற்றிக்கொண்டேன். அவள் இருந்த இடமெல்லாம் ஒரே இரத்தவெள்ளம்! மீசைக்கார மாமா கிட்ட வந்தார்.

"செல்லக்கண்டு இவளை உடனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவம்!" பெத்தாவும் மறுபேச்சின்றி அம்மாவைக் கைத்தாங்கலாகப் பிடிக்க அம்மா அலறினாள்.

"ஐயோ! என்னாலை ஏலாது!"

பெத்தா மீசைக்கார மாமாவிடம் சொன்னாள். பன்னீர்க்குடம் உடைஞ்சிட்டுது.

"வீட்டை மருந்துவிச்சியைக் கூட்டி வாறது தான் நல்லது."

மீசைக்கார மாமா காரில் ஏறினார். வேகமாகப் போனார்.

அம்மாவைப் பெத்தாவும் இன்னுஞ் சிலரும் சேர்ந்து வீட்டுக்குள் தூக்கிச் சென்றனர். பாயிலே படுக்க வைத்தனர். அம்மாவின் வெள்ளைக் கால்களெல்லாம் இரத்தம்! எனக்கு மயக்கம் வரும்போல இருந்தது. என்னைப் பக்கத்து வீட்டு ஆஷா அன்ரி தாங்கிப் பிடிக்க, நான் அவள் மடியில் விழுந்தேன்.

சின்ன இளங்குரல் ஒன்று கேட்டது! நான் கண்ணை விழித்தேன். பெத்தா முன்னால் நின்றா!

"உனக்கு ஒரு தம்பி பிறந்திருக்கிறான்!"

பெத்தாவின் குரல் தேன்போல என் காதில் விழுந்தது. உடனே போய்த் தம்பியைப் பார்க்க வேணும் போல இருந்தது. பெத்தா என்னை அறைக்குள்ள கூட்டிப்போனா! அங்கை அம்மாவுக்குப் பக்கத்தில் வெள்ளைச் சீலைக்குள் சின்னப் பூனைக்குட்டி போல தம்பி கிடந்தான். நல்ல சிவப்பு. தலை நிறைய சுருட்டை மயிர். எனக்கு மகிழ்ச்சி பொங்கி வந்தது. கிட்டப்போனேன். சின்ன வாயால் அவன் கொட்டாவி விட்டான். அவன்ர நாக்கு கறுப்பாய் இருந்தது. வலது கன்னம் முழுவதும் நீலநிறமாக இருந்தது. கழுத்தும் நீலமாய் இருந்தது. அம்மாவைப் பார்த்தேன். வேதனையிலும் முகத்தில் ஒரு பொலிவு.

"உனக்கு ஒரு தம்பி வந்திட்டான்! நீ இப்ப பெரியவளாய் போனாய்!"

அம்மா அண்டைக்குச் சொன்னது இண்டைக்கும் நினைவிருக்கு.

"பிள்ளை நீ வெளியாலை போய் இரு"

பெத்தாவின் சொல்லுக்கு நான் மறுப்புச் சொல்லவில்லை. அந்த அறையில் வீசிய நாற்றமும் என்னை வெளியே விரட்டியது. நான் வெளியே வந்தேன். அங்கே மண்டபத்தில் மீசைக்கார மாமா கதிரையில் இருந்தார். சுற்றும் முற்றும் பார்த்தேன். அப்பாவைக் காணவில்லை. சுவரில் இருந்த கலண்டரைப் பார்த்தேன் கிழிபட்டிருந்தது. நேற்றுச் சனிக்கிழமை! இன்று ஞாயிற்றுக்கிழமை! பாடசாலை இல்லை. எனக்குப் பசித்தது. மீசைக்கார மாமா எழும்பி வந்தார்.

"நான் வீட்டை போகவேணும்! இதைப் பெத்தாவிடம் குடு" என்று கையில் ஒரு சின்னப் பாசலைத் தந்தார்! நான் அதை மறுக்காமல் வாங்கினேன். அவர் உடனே புறப்பட்டுவிட்டார்.

நான் வாசலுக்கு வந்தபோது அவர் காருக்குள்ளே இருந்து சிரித்துக்கொண்டே கையை அசைத்தார். நானும் கையை அசைத்தேன். கார் புழுதி கிளப்பியபடி போய்விட்டது.

"பரிமளா வாசலிலை என்ன செய்யிறாய்?"

பெத்தாவின் குரல் கேட்டது. நான் உள்ளே வந்தேன்.

"பெத்தா இதை உன்னட்டைக் குடுக்கச் சொல்லி மீசைக்கார மாமா தந்திட்டுப் போறார்!"

பெத்தா திடுக்கிட்டு நின்றாள்! நான் அவளிடம் அதைக் குடுக்குமுன்னரே சீறினாள்.

"என்னத்துக்கடி வாங்கினனி! அவன்ர சகவாசம் வேண்டாம் என்று விட்டிட்டம்! பிறகு என்னத்துக்கு இதைத் தந்தவன்?"

அவள் குரலில் இருந்த வெறுப்பு என்னைத் திகைக்க வைத்தது. பெத்தாவுக்கு ஏன் மீசைக்கார மாமாவின் மேல் இவ்வளவு கோபம்?"

"அவர் தந்திட்டு உடனை போட்டார்!"


நான் தயங்கியபடியே சொன்னேன். பெத்தாவிடம் பாசலைக் குடுத்தேன்! அவள் அதை வாங்கிப் பிரித்தாள். அதற்குள் சில படங்கள்! அதைப் பார்த்தபோது, பெத்தா அசந்துபோய்விட்டாள்! அப்படியே கீழே குந்தினாள். படங்களை நானும் பார்க்க விரும்பிப் பக்கத்தில் இருந்தேன். பெத்தா அவற்றை என்னிடம் தந்தாள்.

படத்தில் இருந்தவர்கள் எனக்குப் புதியவர்கள்! ஆனால் ஒருவர் மட்டும் நன்கு தெரிந்தவர். அவர் அம்மப்பா தான்! அம்மப்பாவோடு பக்கத்தில் சிரித்துக்கொண்டு நிற்கும் பொம்பிளை யார்? பெத்தாவிடமே கேட்போம்! நான் தலையை நிமிர்த்தியபோது பெத்தா பக்கத்தில் இல்லை! பின்பக்கம் வேகமாகப் போய்க்கொண்டிருந்தாள். நானும் படங்களோடு அவளைத் தொடர்ந்தேன். அவ கடலை நோக்கிப் போய்க் கொண்டிருந்தா!

(தொடரும்....)



## குழந்தைக்கு தொட்டில் பாதுகாப்பாகவும் ஆபத்தானதாகவும் இருக்கலாம்



கைக்குழந்தையுள்ள தாய்மார்கள் - வேலைகள் அதிகமாகவுள்ள காரணத்தால் கொஞ்ச நேரமாவது குழந்தையைத் தொட்டிலில் உறங்கவைக்கப் பழக்கப் படுத்துகின்றனர். தவழுகிற மற்றும் தத்தித் தத்தி நடக்கிற தங்கள் செல்லக் குழந்தைக்கு நாலுபக்கமும் சுற்றி மரத்திலோ, கம்பியாலோ அமைக்கப்பட்ட தொட்டிலை வாங்கும்போது - பல விடயங்களைக் கவனத்தில் கொள்ளவேண்டும் என சிங்கப்பூர் சுகாதார பாதுகாப்புக்குழு விளக்கியுள்ளது.

அவை எவை எனப் பார்ப்போம் -

நாம் குழந்தைகளைப் உறங்கவைப்பதற்கு தொட்டில் ஒன்றை விலைகொடுத்து வாங்கும்போது, அது குழந்தையின் வயதுக்கு ஏற்றவாறு தெரிவுசெய்து கொள்வது மிக முக்கியமான விடயமாகும்.

இன்று பல குழந்தைகளுக்கு 9 மாதம் ஆகியதும் கால்களை நிலத்தில் வைத்து நிற்க முடிகிறது. இதற்குப் பின் 11 - 12 மாதங்களுக்கிடையில் நடந்து செல்வதற்கு முயற்சிப்பார்கள். இந்தக் காரணங்களால் தொட்டில் வாங்கும்போது பாரமானதாக இருக்கவேண்டும். பாரம் குறைந்த தொட்டிலில் குழந்தையைப் உறங்கவைப்பதால், சிலநேரத்தில் தொட்டிலை அங்கும் இங்கும் அசைப்பதோடு மறு பக்கமாக குழந்தையும் சேர்ந்து புரண்டுவிட இடமுண்டு.

தொட்டிலின் நளாலுபக்க மறைவுகளின் உயரம் 50 சென்ரி மீற்றருக்கு மேல் உயரமாக இருக்க வேண்டியதோடு, அவற்றின் நடுவில் இருக்கும் தடிகளுக்கிடையிலான இடைவெளி 5, 8, சென்ரிமீற்றர் இடைவெளியில் இருப்பது மிக முக்கியமாகும்.

தொட்டிலுக்கு இருக்கும் கதவின் பூட்டை குழந்தைக்கு தெரியாதவாறு மறைத்து பூட்டி வைப்பது மிக அத்தியாவசியமாகும்.

குழந்தைக்கு தொட்டிலுக்குள் விளையாடக் கொடுக்கும் விளையாட்டுப் பொருட்களில் பெரியவர்கள் அவதானமாக இருக்கவேண்டும். காரணம் - அவை அளவுக்கு மிஞ்சி பெரிதாக இருந்தால், குழந்தை அதன்மேல் ஏறி தொட்டிலின் வெளியே வருவதற்கு முயற்சிக்கலாம்.

இவ்வாறான விடயங்களில் தொட்டில் வாங்கும்போது கவனமாக பார்த்து வாங்குவதுடன், அதைப் பயன்படுத்தும்போதும் அவதானமாகப் பயன்படுத்த வேண்டும்.

## மனமே! மீண்டெழுவாய்

போர் மற்றும் இயற்கை அனர்த்தம் காரணங்களால் பல்வேறு வகையில் உளநலம் பாதிப்புக்குட்பட்டவர்களின் மனநிலையைக் கருத்தில் கொண்டு, அவர்களின் மனதை ஆற்றுப்படுத்தும் முகமான கருத்துக்களை உள்ளடக்கி இந்தக் கட்டுரைத் தொடர் பிரசுரிக்கப்படுகிறது.



மனமே! அத்தனையையும் இழந்து, சமூகம் என்ற உறவு உன்னைத் தாங்கும் என்ற நம்பிக்கையுடன் இருந்தாயா? ஓடிவந்து உன்சோகம் விசாரித்து வினவிய சமூகம் - உனக்காக மனம் விரும்பிக்கொடுத்த பொருட்களை வாங்கிப் பரிமாறுவேன் என்று தன் கையில் ஏந்திய பொருட்களைத் தாமே அபகரித்த நிலைமையை எண்ணி வேதனைப் படுகிறாயா? வெந்தபுண்ணில் வேல்பாச்சிய வேதனையை நினைத்து நினைத்து வருந்தி வருந்தி அழுகிறாயா? கோபப்படுகிறாயா?

மனமே! தன்னிடம் கொடுக்கப் பொருளில்லாமல் இருக்கலாம், பொருள் இருந்து கொடுக்க மனமின்றியிருப்பினும் தப்பில்லை. பாதிக்கப்பட்டு நிர்க்கதியற்றவனாக நிற்கும் ஒருவனுக்கு மட்டுமல்ல, பல்லாயிரக்கணக்கான மக்களுக்காக தெய்வக் கருணையுள்ளம் கொண்டு வாரிவழங்கியவர்களின் பொருட்களை அபகரித்த செயல் - உன்னை ஆத்திரம் கொள்ளச் செய்வது, உனது மனத்தின் நியாயக் கோரிக்கை. சேவைப் பணிக்காக உத்தியோகத்தர்களை நியமித்து, அப்பணிக்காக விசேட கொடுப்பனவுகளையும் பெற்றவர்கள் இத்தகைய இழிவுசெயலைச் செய்தமை, தன் தொழிலுக்குமட்டுமன்றி மனிதநேயத்துக்கும் துரோகம் என்பதை உன் மனம் நினைப்பது உனக்கும் படிப்பினையாக அமைகிறது என்பதைச் சிந்தி.

ஒரு அநீதியை விமர்சிக்க விளையும் நாம் - அந்த நடத்தைக்கான சிந்தனையை தன் உள்ளத்திலிருந்து அகற்றும் படிப்பினையை அனுபவமாக எடுத்துக்கொள்.

கடவுள் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருந்து கொள்கின்றான். உன் நிலை கண்டு மனம் துடித்து, உனக்காக பொருட்களைக் கொடுத்து ஆறுதல் அளித்தவனை - நீ பூசிக்கிறாய். யாரோ உனக்காகக் கொடுத்த பொருளைத் தன் கைகொண்டு வாங்கி, உனக்கு நீட்டவேண்டிய கரத்தை - தன் வாய்க்குள் செலுத்தியவனை நீ துவேசிக்கிறாய். கடவுள் வாசம் செய்யும் ஒவ்வொரு மனிதனும் தன் உடலுக்குள் இருக்கும் இறைவனை அழிப்பதற்காகவே தன் மனத்தாலும், தன் செயலாலும் தனக்குத் தானே அம்பு எய்கின்றான் என்பதை நினைத்து உன் மனதைத் தேற்று.

மனமே! நீ ஆறுதலடைந்தால் மட்டும் போதாது. இத்தகைய இராட்சத மனம் கொண்டவர்கள் மனதில் இறைவனை நிறுத்த வேண்டியதும் உன் கடமை.

தப்பும், தவறும் செய்பவர்களைக் கண்டு பார்வையாளர்களாக மட்டும் இருந்துவிடாமல், தவறுகளை எடுத்து இயம்புங்கள். உரிய மேலதிகாரிகளிடம் கூறுங்கள். பத்திரிகையாளர்களிடம் கூறுங்கள். கோசம் எழுப்புவது கூடத் தப்பில்லை. இவை உங்களின் சுயநலச் செயல் என்று மட்டும் நினைத்து வெட்கப் படாதீர்கள். வயிற்றுப் பசி போக்கும் செயல் என்று தாழ்வுச் சிக்கல் அடையாதீர்கள்.

உங்களோடு, உங்கள் மத்தியில், உங்கள் கண்களில் பட்டுக்கொண்டு ஓர் மனித உள்ளம் - நான், எனது என்கின்ற இச்சைகளுக்குள், மாயைகளுக்குள் மூழ்கிக்கொண்டிருப்போரை மீட்டெடுக்கவேண்டியதும் உன் கடமை. இவர்களைப்போல் செயற்பட்டுக்கொண்டிருப்போருக்கும் எதிர்காலத்தில் மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற போர்வைபோக்க எத்தனிப்போரையும் நீதான் காப்பாற்ற வேண்டும்.

நீ தான் மோட்சத்துக்குப்போக வேண்டும் என்று நினைத்து, நீ மட்டும் நற்பணி செய்வதில் சுயநலம் மறைந்திருக்கும். அதனால் தான் சொல்கின்றேன் - ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்கேற்ப - மனமே! திருந்தாத நெஞ்சங்களின் செயல் கண்டு அடங்கிப்போகாமல், அச்சப்படாமல் உனக்குக் கிடைக்கவேண்டியவற்றை நீ நியாயப்படுத்துவதன்மூலம் நீ மட்டுமன்றி பச்சோந்தி மனம் படைத்தவர்களையும் நல்வழிப்படுத்த முடியும்.

மனமே! சுனாமி இயற்கையின் சீற்றம் என்று நீ கோபம் கொண்டாலும், அந்தச் சுனாமியால் பல மனங்கள் தாக்கப்பட்டு, வேதனைக்குள்ளாக்கினாலும் - உன் இழப்பின் மீட்சியாக பிணத்தின் மேல் ஏறிநின்று, பணத்துக்காக ஏலம்பேசும் கொடிய நெஞ்சினர்க்கு நிலையாமைக் கருத்தையும், ஆத்மீக வழிகாட்டலையும் நல்வாழ்வியலையும் காட்ட

மனமே! மீண்டெடுவாய்.

- மலர் சின்னையா -

# வவுனியா தெற்கு வலய முன்பள்ளிகளுக்கு உபகரணங்களும், ஊக்குவிப்புப் பணமும்

(வவுனியா)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தால் ஒழுங்கு படுத்தப்பட்ட வவுனியா தெற்கு வலயத்திலுள்ள முன்பள்ளிகளின் அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு, ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட முன்பள்ளிகளுக்கான தளபாடங்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வு கடந்த திங்கட்கிழமை கால்ல 10 மணியளவில் சித்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், விநோகராதலிங்கம் ஆகியோரும், தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்டப் பணிப்பாளர் மூர்த்தி மற்றும் பிரதேச, வலய, மாவட்ட முன்பள்ளிக் கட்டமைப்பு உறுப்பினர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், இணைப்பாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். வன்னி மாவட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரால் ஒதுக்கப்பட்ட நிதி யைக்கொண்டு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான அலுமாரிகள் - 16, கதிரைகள் - 15 என்பன பிரதேச கட்டமைப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முன் பள்ளிகளுக்கு வழங்கப்பட்டன.

தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்டப் பணிப்பாளரால் புனர்வாழ்வுக் கழக மாவட்டச் செயலக நிதியிலிருந்து பிரதேச மட்ட கட்டமைப்புகளின் வங்கிச் செயற்பாடுகளை வலுவுடன் இயங்கவைக்கும் நோக்குடன், மூவின மக்களையும் உள்ளடக்கியதாக அமைக்கப்பட்ட ஐந்து முன்பள்ளிக் கட்டமைப்புகளிடம் தலா ரூபா 5 ஆயிரம் ரூபா பணமாகவும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மக்கள் வங்கி மூலம் கடனுதவி

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, மக்கள்வங்கி மூலமாக வழங்கப்படும் நிதியுதவி நாளையும், நாளை மறுதினமும் வழங்கப்படவுள்ளதென மக்கள் வங்கி முகாமையாளர் தெரிவித்தார்.

இந்த நிதியுதவியை இரணைப்பாலை பகுதி மக்களுக்கு இரணைப்பாலை கிராம அலுவலர் அலுவலகத்திலும், ஏனைய பகுதி மக்களுக்கு புதுக்குடியிருப்பு மக்கள்வங்கிக் கிளையிலும் வைத்து இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

## வலயக்கல்விப் பணிப்பாளருக்கு சேவைநலன் பாராட்டுவிழா

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரும் முன்னாள் முல்லைத்தீவு மாவட்ட வலயக்கல்விப் பணிப்பாளருமான த.குருகுலராசாவின் சேவைநலன் பாராட்டுவிழா புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வு -முல்லைத்தீவு வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் ச.நாகரத்தினம் தலைமையில் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியாசாலையில் இருந்து ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோர் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவிகளின் பாண்ட் வாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டு, வரவேற்புரையை ஆசிரிய ஆலோசகர் திருமதி லி.இரகுநாதன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து சிறப்புரையை வற்றாப்பளை மகா வித்தியாலய அதிபர் ரங்கநாதன், புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அதிபர் பி.கே.சிவலிங்கம், கரைதுறைப்பற்று கோட்டக்கல்வி அதிகாரி அன்ரனி ஜெயநாதன், முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், முல்லைத்தீவு மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் அறிவன்பன் உட்பட பலரும் நிகழ்த்தினர்.

தொடர்ந்து முல்லைத்தீவு வலய கல்வித்திணைக்களத்தால் அன்பளிப்பு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

இந்தச் சேவைநலன் பாராட்டு விழாவை முல்லைத்தீவு வலயக் கல்வித் திணைக்களத்தினர் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.




## அடிப்படை வசதியற்ற நிலையில் மன்னார் - வலையன்கட்டுமக்கள்

(மன்னார்)

மன்னார் - வலையன்கட்டு பிரதேசத்தில் மக்கள் அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் வாழும் மக்கள் போக்குவரத்து வசதியின்மை, மருத்துவ வசதியின்மை போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதுடன், இங்குள்ள பாடசாலையில் கட்டட வசதியின்மை, ஆசிரியர் பற்றாக்குறை போன்ற காரணங்களால் கற்றல் செயற்பாடுகளிலும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதனைக் கருத்திற்கொண்டு, தமது பிரதேச முன்னேற்றத்துக்காக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என இந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## ஆணின் சடலம் கரையொதுங்கியது

மன்னார் - தாழ்வுப்பாடு கடற்கரையில் நேற்றுமுன்தினம் உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் கரையொதுங்கியது.

சடலத்தை மீட்டெடுத்த பொலிஸார் - அதனை மன்னார் மாவட்ட மருத்துவமனையில் ஒப்படைத்தனர். சடலம் இனங்காணப்படுவதற்காக, தொடர்ந்தும் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

## கலந்துரையாடல்

மன்னார் - பெரியமடு பிரதேசத்தில் ஊரக வளர்ச்சிப்பணி தொடர்பாக கிராமமக்களின் அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய் தல், நன்னீர் மீன்பிடியைஊக்கு வித்தல், அபிவிருத்திப் பணிகள் முன்னெடுப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஊரக வளர்ச்சிப் பணி மாவட்டச் செயலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெற்றது.

## கிராமிய அபிவிருத்தி நிறுவனத்தால் வீட்டுத்தோட்டக் கடன் வழங்கல்

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் கிராமிய அபிவிருத்தி நிறுவனத்தால் வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கைக்கான கடன் வழங்கும் நிகழ்வு - கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அக்கரா யன் கோணாவில் பகுதியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு கிராமிய புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தில் அதன் தலைவர் ராமச்சந்திரன் தலைமையில் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியது.

இந்த நிகழ்வில் மங்கள விளக்கை ஒக்ஸ்பாம் நிறுவனப் பிரதிநிதி கெலன், அக்கராயன் பிரதேச உதவிப் பணிப்பாளர் நல்லையா ஆகியோர் ஏற்றிவைத்தனர். இதனைத் தொடர்ந்து கருத்துரைகளை கெலன் நல்லையா, ஊரக வளர்ச்சிப் பணிப் பொறுப்பாளர் தசவர்ணன், அக்கராயன் பிரதேசப் பொறுப்பாளர் திருமாவளவன் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கோணாவில் கிராம புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்துக்கூடாக நாளாந்த ஜீவனோபாயத்தையும், சுயபொருளாதார அபிவிருத்தியையும் ஊக்குவிக்கும் நோக்குடனேயே இந்தக் கடன் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. யூனியன் குளம், காந்தி கிராமங்களைச் சார்ந்த மக்களுள் வீட்டுத்தோட்டங்களை மேற்கொள்வதற்காக பயனாளி ஒருவருக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம், 20 பயனாளிகளுக்கு ஒரு லட்சம் ரூபா கடன் வழங்கப்பட்டது. அத்தோடு மூன்று நீர் இறைக்கும் இயந்திரங்களும் கடனடிப்படையில் இந்த இரு கிராமங்களுக்கும் வழங்கப்பட்டன.



## விடுதலைப் பறவைகள் நாடகக்குழு சுவிஸிலிருந்து தாயகம் திரும்பியது

தமிழ் மண்ணில் சிங்கள இன வெறியர்களால் தமது மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைத் தமிழீழத்தின் தெருக்களில் வீதி நாடகங்களாக மக்கள் முன் கொண்டு சென்று, தமிழர் போராட்டத்துக்கு வலுச்சேர்த்துவரும் கொள்கை முன்னெடுப்புப் பிரிவில் விடுதலைப் பறவைகள் நாடகக்குழுவினர் கடந்த திங்கட்கிழமை சுவிசிலிருந்து தாயகம் திரும்பினர்.

கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி தாயகத்திலிருந்து சுவிசிலுள்ள சூரிச் விமான நிலையத்தைச் சென்றடைந்த இந்தக் கலைஞர்கள் நோர்வே, டென்மார்க், சுவீடன், பிரான்ஸ், ஜேர்மனி, ஹொலன்ட், சுவிற்சர்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் மேடையேறி பல ஆயிரக்கணக்கான மக்களின் ஆதரவையும், பாராட்டுகளையும் பெற்றனர்.

குறிப்பாக சூரியத்தேவியின் சோகங்கள், புதுவையன்பனின் கரைதேடும் ஓடங்கள் போன்ற இரு நாடகங்களையும் அரங்க நாடக வடிவில் அமைத்து மக்களின் அமோக ஆதரவைப் பெற்றனர்.

கடந்த முதலாம் திகதி சுவிசில் சூரிச் மாநகர் தமிழீழ விடுதலைப் புலிகள் சுவிஸ் கிளையினரால் நடத்தப்பட்ட தொழிலாளர் தின ஊர்வலத்திலும் கலந்து சிறப்பித்த கொள்கை முன்னெடுப்புப் பிரிவில் விடுதலைப் பறவைகள் நாடகக்குழுவினர் கடந்த திங்களன்று பிற்பகல் ஐரோப்பிய நேரப்படி 15 மணிக்கு சுவிஸிலுள்ள சூரிச் விமான நிலையத்திலிருந்து தாயகம் திரும்பினர்.

19 கலைஞர்களையும் தமிழீழ விடுதலைப்புலிகளின் சுவிஸ் கிளைப் பொறுப்பாளர், செயற்பாட்டாளர்கள் உட்பட பொதுமக்கள் பலரும் விமான நிலையத்தில் வந்து வழியனுப்பி வைத்தனர்.

## இன்றைய நாளில்... அன்று நிகழ்ந்தவை...

**மே - 13**

1908 : அமெரிக்க ஜனாதிபதி சுற்றுச்சூழல் மாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

1913 : ரஷ்யாவில் பொறியியலாளரான கிகார் சிகோர்ஸ்க்கி 04 இயந்திரங்கள் கொண்ட விமானம் ஒன்றை வடிவமைத்து ஓட்டிக் காண்பித்தார். இவரால் வடிவமைக்கப்பட்ட கழிப்பறை வசதிகளோடு கூடிய இன்னுமொரு பயணிகள் விமானத்தை ரஸ்க்கி விட்டியாஸ் என்பவர் இன்று ஓட்டிக்காட்டினார்.

1915: லண்டனிலும் அதனைச்சூழ்ந்த நகரங்களிலும் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்தவர்கள் தாக்கப்பட்டனர்.

1918: ஆபிரிக்கப் போர்க்களத்தில் பிரிட்டிஷ் கிழக்காபிரிக்கப் படையணியைச் சேர்ந்த இரு ரோந்துப் பிரிவுகளை சிங்கங்கள் பாய்ந்து தாக்கி கொன்றுவிட்டன.

☆ : பிரான்ஸில் தொழிற்சங்கமே ஆச்சரியப்படும் படியாக வெடி மருந்துத் தொழிற்சாலைகளைச் சேர்ந்த 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் போரை எதிர்த்து வேலை நிறுத்தத்தில் குதித்தனர்

☆ : அமெரிக்காவில் போர் - தொழிலாளர் கொள்கைச் சபை உருவாக்கப்பட்டது.

1919 : சமாதான சபைக்கூட்டத்தில் முதலாம் உலகப் போருக்கான முழுப் பொறுப்பையும் ஜேர்மனியே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் என்ற கூற்றை ஜேர்மனி கடுமையாக எதிர்த்தது.

☆ : துருக்கியில் ஸ்மைர்னா என்ற இடத்தில் கிறிஸ்தவ மக்களைப் பாதுகாப்பதற்கென்று கூறி கிரேக்கப் படையினர் வந்திறங்கினர். இறங்கிய உடனேயே இருபது துருக்கியர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

1934 : சவுதி அரேபியா - ஏமான் பாலைவனப் போர் தொடர்பிலான பேச்சு வார்த்தைகள் ஜெட்டாவில் நடைபெற்றது. இதில் உடன்பாடு காணப்பட்டதைத் தொடர்ந்து, இந்தப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

1941: ஈராக்கில் ஜேர்மனி ஆதரவு அரசை விரட்டியடிக்க அரபுப் படைகள் நுழைந்தன.

1945 : பர்மாவில் ஐராவதி நதியின் மேற்குக் கரையிலுள்ள டௌங்டா என்னும் இடத்தில் லச்சிமன் குராங் என்னும் வீரன் தனி ஒருவனாக நின்று ஜப்பானியப் படைகளின் தாக்குதலை முறியடித்தான். தொடர்ந்து மூன்று நாட்கள் நடந்த தாக்குதலில் ஜப்பானியப் படைகளில் முன்னேற முடியாது போய்விட்டது.

1954 : சென்லோரன்ஸ் கடல் வழியை கனடா நாட்டோடு இணைந்து கட்டுவதற்கு அமெரிக்கா முன்வந்தது.

1958 : அல்ஜீரியாவில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்கள் கலகம் புரியத் தொடங்கியதைத் தொடர்ந்து பிரான்ஸ் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டது.

1961 : தென்வியட்நாமுக்கு அதிக உதவி புரிவதற்கு அமெரிக்கா உறுதியளித்தது.

1965 : மேற்கு ஜேர்மனி - இஸ்ரேலுடன் தூதரகத் தொடர்புகளைப் பேண ஆரம்பித்தது.

1978 : ஈழத்திலும், இந்தியாவிலும் புகழ்பெற்று விளங்கிய தவில் வித்துவான் இணுவில் தெட்சணாமூர்த்தி மரணமானார்.

1981 : ரோம் சென்.பீற்றஸ் சதுக்கத்தில் வைத்து அண்மையில் மரணமடைந்த இரண்டாவது போப்.ஜோன்போலை துருக்கிய தீவிரவாதி முகம்மது அலி அகா துப்பாக்கியால் சுட்டதில் பாப்பரசர் படுகாயமடைந்தார்.

1982 : சோயஸ் T - 5 என்ற விண்கலம் செலுத்தப்பட்டது. இதில் சென்ற அனாம் போலி மெரிஸோவாய், அலக்ஷாண்டர் செரிப்ரோவ் என்ற இரு விண்வெளி வீரர்களும் - 211 நாட்களும், 9 மணித்தியாலங்களும் விண்ணில் தங்கியிருந்து சாதனை புரிந்தனர்.

1988 : நீக்ரோ அடிமைத் தனத்தை ஒழித்த 100 ஆவது ஆண்டு நிறைவு விழா பிரேசிலில் மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

1997: நெதர்லாந்தில் தாய்மார் தினம்கொண்டாடப்படுகிறது.

☆ இந்தியாவில் தேசிய ஒருமைப்பாட்டுத் தினம் கெண்டாடப்பட்டது.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
கொக்குஒக்க கூம்பும் பருவத்து மற்றுஅதன்
குத்துஒக்க சீர்த்த இடத்து
திருக்குறள்

## நமது நோக்கு

# வெகுஜனப் போராட்டங்கள் உலகிற்கு சொல்லும் செய்தி

அண்மைக் காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி ரசினதும், அதன் ஆயுதப்படைகளினதும் பல்வேறுபட்ட சயற்பாடுகளுக்கு எதிராக, வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் நதிகளில் வெகுசனப் போராட்டங்கள் அதிகரித்துவருவது ன்கூடு.

சமாதானத்தையும், அமைதியான சூழலையும், இயல்பு வாழ்க்கையையும் எதிர்பார்த்து ஏமாற்றமடைந்த மக்கள் - தமது அடிப்படை அரசியல் மற்றும் மனித உரிமைகளை அரசும் படையினரும் தொடர்ந்து உதாசீனம் செய்தும், அவமதித்தும் வருவதனால் வெஞ்சினம் கொண்டு போராடும் ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளமை தவிர்க்கமுடியாத ஒன்றேயாகும்.

எவ்வகையான அரசின் அடக்கமுறைகளுக்கும், ஆயுதப்படையினரதும், அவர்களின் அடிவருடிகளாகச் செயற்படும் இனமான மற்ற தமிழ் ஆயுதக்குழுக்களினதும் அச்சுறுத்தல்கள் மற்றும் மனிதஉரிமைகள் பறிப்பு நடவடிக்கைகளுக்கும் அடங்கி - மௌனம் காத்து, தலை குனிந்து நிற்க இனியும் தாங்கள் தயாரில்லை என்ற பொங்கு தமிழுணர்வின் எழுச்சிப் பிரவாகமாகவே இந்த மக்கள் போராட்டங்களை மதிப்பிடமுடிகிறது.

சுமார் இரு தசாப்தத்திற்கும் அதிகமான கால பேரினவாத ஆட்சியாளரின் நியாயமற்றதும், ஆதிக்கவெறி கொண்டதுமான போர்ப்பிரகடனத்தின் தாக்கங்கள், அழிவுகள், இழப்புகள் அனைத்திற்கும் முகம்கொடுத்து, இழப்பதற்கு இனி ஏது ல்லை என்ற நிலையில் - வெல்வதற்கு தங்களின் தாயக மண்ணும், மனித, அரசியல் உரிமைகளும், விடுதலையும் உண்டு என்ற சுதந்திர உயிர்ப்புடன் வீறுகொண்டு எழுந்து பேரினவாதத்திற்கு மரணஅடி கொடுத்த மக்கள், சமாதானத்தின் பேரால் தாம் மீண்டும் ஏமாற்றப்படுவதையும், அடக்கி ஒடுக்கப்படுவதையும் எந்தவகையிலும் சகித்துக்கொள்ளமாட்டார்கள் எனபதை விடுதலைப் போராட்டங்களின் வரலாறுகளை அறிந்தோர் அறிவர்.

போர் நிறுத்தம் ஏற்பட்டு புரிந்துணர்வு உடன்பாட்டை சர்வதேச சமூகத்தின் சாட்சியுடன் கைச்சாத்திட்டுவிட்டு, பேச்சுவார்த்தைகளில் நியாயம் தவறி, நேர்மையற்ற அரசியல் வியூகங்களைக் கையாண்டு காலம் கடத்தும் யுக்திகளைக் கையாண்ட ஐககிய தேசிய முன்னணி அரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து தேர்தல் மூலம் பதவிக்கு வந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் சமாதான முயற்சிகளைப் பகிரங்கமாக எதிர்த்துக் கொண்டே ஆட்சிப்பொறுப்பை ஏற்றனர்.

எனவே, அவர்கள் சமாதான முயற்சிகளை எந்த வகையிலும் நியாயமானதாகத் தொடரமாட்டார்கள் என்பதை தமிழ் மக்கள் அன்றே திடமாகத் தீர்மானம் எடுத்துக் கொண்டார்கள்.

ஆனாலும், சர்வதேச சமூகத்தின் அமைதி முயற்சிகளுக்கு மௌனமாக ஆதரவை அளித்தபடி அரசின் செயற்பாடுகளை எச்சரிக்கையுணர்வுடன் அவதானித்தே வந்தனர். சமாதானத்தின் பேரால் தாங்கள் இனியும் ஏமாறக்கூடாது என்பதே அவரகளின் குறிக்கோளாக இருந்தது.

ஆனால், கடந்த ஓராண்டுக்கும் அதிகமான காலப் பகுதியில் தமிழர்களின் சமாதான எதிர்பார்ப்பில் எந்தவித நம்பிக்கையையும் அரசு ஏற்படுத்தவில்லை என்பதுடன், மீண்டும யுத்தத்திற்கான தயார்ப்படுத்தல்களில் தீவிர முனைப்புடன் செயற்பட்டு வரும் அரசும், அதன் ஆதரவு சக்திகளும், ஆயுதப்படையினரும் எல்லாவகையிலும் தமிழ் மக்களின் உணர்வுகளைச் சீண்டி, அவமானப்படுத்தி அச்சுறுத்தும் செயற்பாடுகளில் வெறிகொண்டு இயங்குவதை எத்தனை காலத்திற்கு மௌனமாகப் பார்த்துக் கொண்டு நிற்கமுடியுமாம்?

தமிழர் தாயகப் பகுதிகளில் மக்களின் அரசுக்கும், அரச படையினருக்கும் எதிரான வெகுஜனப் போராட்டங்களின் தோற்றுவாய் இதுவேயாகும்.

- ஆரம்பத்தில் இடைக்கால நிர்வாகத்தில் இழுபறி நிலையை உருவாக்கி ஏமாற்ற முயன்றார்கள்.
- புரிந்துணர்வு உடன்பாட்டின் விதிமுறைகளை நடைமுறைப்படுத்தாது ஏமாற்றினார்கள்.
- உயர் பாதுகாப்பு வலய மீள்குடியேற்ற உரிமையை நிராகரித்து மறுத்தார்கள்.
- நியாயம்கோரி ஜனநாயக ரீதியில் போராடும் மக்களின் நியாயம் கோரும் உரிமையை ஆயுதமுனையில் தொடர்ந்து அடக்கிவருகிறார்கள்.
- பொதுக் கட்டமைப்பு என்ற மனித நேயப்பணிக்கான கூட்டு முகாமைத்துவப் பணிக்கான அமைப்பை அரசியல் விவகாரமாக்கி இழுத்தடித்து ஏமாற்றி வருகிறார்கள்...
- இப்படி எத்தனையோ...


பேரினவாதிகளின் இயல்பை, வெறித்தனத்தை, யுத்தமும் மாற்றவில்லை, சமாதானமும் மாற்றவில்லை என்றே தோன்றுகிறது.

இந்தநிலையில், இப்படியே சமாதானத்தின் பேரால் தொடர்நதும் தமிழ் மக்கள் பொறுமைகாத்து ஏமாளிகளாக இருக்க வேண்டும், அவமானப்படவேண்டும், அடிமைகளாக வாழவேண்டும் என எவரும் நிர்ப்பந்திக்க முடியாது.

சர்வதேச சமூகம் வரலாற்றின் அடிப்படையில், நியாயத் தன்மையுடன் இதைப் புரிந்துகொண்டால்போதும்.

தமிழர் தாயகமெங்கும் தற்போது கிளர்ந்தெழுந்து போராடி வரும் வெகுஜனங்களின் உணர்வெழுச்சியை ஆயுத முனையில் அடக்க நினைப்பது ஆபத்தான சூழலுக்கு இந்த நாட்டை இழுத்துச் செல்ல அரசு விரும்புவதாகவே அர்த்தப்படும்.

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# இன்று எல்லாவற்றையும் எதிர்ப்போர் நாளை தாமாகவே தரப்போகிறார்கள்

பொதுக்கட்டமைப்பு வராது, இடைக்கால நிர்வாக தன்னாதிக்க அதிகாரசபையும் இல்லை. மொத்தத்தில் தமிழ் மக்களின் எந்தக் கோரிக்கையும் நிறைவேறாது. இதுதான் இன்றைய நிலை. இனி அடுத்து என்ன நடக்கும்? என்று கேட்டபடியே வந்தமர்ந்தார் நண்பர் பரமசிவம்.

சந்திவெளிச் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மன்னாரில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பாதுகாப்புப் படையினர் தடியடி நடத்தியிருக்கிறார்கள். துப்பாக்கிச் சூடு, தடியடி என்று மீண்டும் தமிழ்ப் பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் தொடங்கியிருப்பது நல்லதாகத் தெரிகிறதா? என்று நான் கேட்டேன்.

தமிழ் மக்களின் கோரிக்கைகள் எதையும் நிறைவேற்றுவதற்கு சிங்கள - பௌத்த மேலாண்மைவாதிகள் தயாராக இல்லை. ஆனால் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்க வேண்டுமென்ற மனப்பான்மையை அவர்கள் மீண்டும் வளர்த்து வருவதற்குத் தயாராகியிருக்கிறார்கள் என்றார் பரமசிவம்.

இதே சமயம் இப்போது மீண்டும் விடுதலைப்புலிகள் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களைத் தங்கள் படைகளுக்குச் சேர்த்துத் திரிகிறார்கள் என்ற கூச்சலையும் ஓங்கி ஒலிக்கச் செய்கிறார்கள். தமிழ் மக்களின் அவசர, அவசியக் கோரிக்கைகளை மறைப்பதற்கும், சர்வதேச சமூகத்தின் கவனத்தைத் திசை திருப்பவும், சிறுவர்களைக் கட்டாயமாகப் படையில் சேர்க்கிறார்கள் என்ற பிரசாரத்தை சிங்கள - பௌத்த இனவாத ஊடகங்கள் மீண்டும் பெரிதுபடுத்தத் தொடங்கியிருக்கின்றன என்றேன்.

இது மட்டுமல்ல புலிகளுக்குப் பயந்து கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் வந்து குடியேறியிருக்கும் தமிழர்களை வேவுபார்ப்பதற்குப் புலிப் புனலாய்வினர் கொழும்புக்கு வந்திருப்பதாகவும், இனவாத ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. சந்திவெளிச் சமபவமும், அங்கு நடந்த ஆர்ப்பாட்டங்களும் புலிகள் தூண்டிவிட்டதால்தான் நடந்தவை என்றும், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து கிழக்கிலும் - வடக்கிலும் நடந்த கடையடைப்பு, ஹர்த்தால் எல்லாமே புலிகளால்தான் நடத்தப்பட்டவை என்றும், இந்த இனவாத ஏடுகள் கூறுகின்றன என்றேன்.

கொழும்பிலும் மற்றும் இடங்களிலும் சிங்களவர்கள் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தினால் சிங்கள மக்கள் தேசப்பற்றுடன் நடத்துபவை. தமிழர் தாயகத்தில் எது நடந்தாலும் புலிகள் நடத்துபவை என்றுதான் இந்த இனவாத ஊடகங்கள் மட்டுமல்ல ஆட்சி பீடத்திலுள்ளவர்களும் சொல்லத் தயங்குவதில்லை. ஆனால் இவர்கள் இந்தப் பிரசாரத்துடன் தம்மை அறியாமலே ஓர் உண்மையையும் சொல்லிவிடுகிறார்கள். விடுதலைப்புலிகளுக்குத் தமிழர் தாயகத்திலுள்ள அனைவரும் எவ்வளவு மதிப்பும், மரியாதையும், ஆதரவும் வைத்திருக்கிறார்கள் என்ற உண்மையே அது என்றார் பரமசிவம்.

கடற்கோளினால் பாதிக்கப்பட்டு இன்னமும் அகதி முகாம்களில் அல்லல்படும் தமிழர் தாயக மக்கள் மறுவாழ்வு பெறுவதற்கும் போரினாலும், கடற்கோளினாலும் அழிந்துபோன தமிழர் தாயகப் பகுதிகளைப் புனரமைக்கவும் சிங்கள - பௌத்த மேலாண்மைவாதிகள் உதவுவதற்குத் தயாராக இல்லை. உயர் பாதுகாப்பு வல்யம் என்ற பெயரில் தமிழ் மக்களின் வாழ்விடங்களை அரச படைகள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. போதாக்குறைக்கு போர்நிறுத்த ஒப்பந்த விதிகளையும் மீறி புதிய, புதிய முகாம்களையும் அமைக்கிறார்கள். இதை எதிர்த்துத் தட்டிக்கேட்கும்போது மக்களைச் சுட்டுத் தள்ளுகிறார்கள். இவற்றையெல்லாம் இன்னமும் சர்வதேசமும் சும்மா தொடர்ந்தும் பார்த்துக்கொண்டுதானிருக்கப் போகின்றதா? என்றேன்.

கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெளிநாடுகள் கொடுத்த உதவியைப் பகிர்ந்தளிப்பதற்குப் பொதுக் கட்டமைப்பு ஒன்றைப் புலிகளிடம் சேர்ந்து அமைக்கப் போவதாக சந்திரிகா அம்மையார் இன்னமும் சொல்லிக்கொண்டுதானிருக்கிறார். அம்மையார் பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படும் என்று சொல்லி வருவதும் பொதுக்கட்டமைப்புக்கு அரசாங்கத்திலுள்ளவர்களில் ஒரு பகுதியினர் தொடர்ந்து எதிர்த்து வருவதும், உதவும் நாடுகளிடமிருந்து அதிக உதவியைப் பெறுவதற்கு அம்மையாரின் ஒரு தந்திரோபாயமாக இருக்கலாம் என்று தமிழ்ச்செல்வன் சந்தேகிப்பதில் நியாயமிருப்பதாகவே தோன்றுகிறது என்றார் பரமசிவம்.

பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படாமலே போகும் என்று வைத்துக்கொள்ளுவோம். ஜே.வி.பியும், பேரியலும் இன்னும் அவர்களைச் சேர்ந்தவர்களும் கொல்வதைப்போல அரசாங்கமே தனது ஆள்களைவைத்துப் பாதிக்கப்பட்டவர்களுக்குப் புனர்வாழ்வும், புனரமைப்பும் வழங்க முன்வருமோ? என்று கேட்டேன்.

இப்படிச் செய்வதற்கு உதவி வழங்கும் நாடுகள் பூரண சமாதானம் தெரிவிக்கும் என்று நான் நம்பவில்லை. பாரபட்சமற்ற முறையில் அரசாங்கம் நடந்துகொள்ளவில்லை என்பதுதானே நாட்டின் முக்கிய பிரச்சினையாக உள்ளது. பாதிக்கப்பட்ட தமிழர் தாயக மக்களுக்கு உதவுவதற்குத்தான் வெளிநாடுகள் இப்பொழுது நிதி ஒதுக்கியுள்ளன. தமிழர் தாயகத்துக்கு விடுதலைப்புலிகள்தான் பிரதிநிதித்துவம் வகிக்கிக்றார்கள் என்பதை ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரும் ஏற்றுக்கொண்டுவிட்டார். உலக நாடுகள் பலவும்கூட இதை ஏற்றுக்கொண்டிருக்கின்றன. உலகவங்கியும் இதை ஏற்றுள்ளது. இந்த நிலையில் பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படாவிடில் தமிழர் தாயகத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பொறுப்பை தமிழீழ விடுதலைப்புலிகளிடம்தான் ஒப்படைக்கவேண்டும். இதுவேதான் மாற்றுவழியாக அமையுமென்றே நான் நினைக்கிறேன் என்றேன்.

சிங்கள - பௌத்த மேலாண்மைவாதிகளும், சிங்கள - பௌத்த மேலாண்மை ஆதிக்க சக்திகளும் என்னதான் பிரசாரம் செய்தாலும் நம்மட சங்கரியும், டக்ளஸ்ும் மற்றும் அதுகளோட சேர்ந்ததுகளும் என்ன குத்துக்கரணம் போட்டாலும் தமிழர் தாயகத்தில் முக்கால்பகுதி அல்லது பெரும்பகுதி இப்பொழுதும் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தில்தான் ஓர் அரசமைப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருப்பதை வெளிநாடுகள் பலவும் ஏற்றுக்கொண்டிருப்பதை மறுக்கமுடியாது. சிறிலங்கா அரசுக்கு ஈடாக தமிழர் தாயகத்தில் ஓர் அரசு இப்பொழுது ஆட்சி செய்துகொண்டிருப்பது நிதர்சனமான உண்மை என்றார் பரமசிவம்.

ஜே.வி.பியும் அதன் தேசப்பற்றுள்ள இயக்கமும், ஹெல உறுமய என்ற பிக்குகள் கட்சியும் இப்படி தமிழ் மக்களின் கோரிக்கைகள் எல்லாவற்றையும் எதிர்ப்பது எமது இலட்சியத்தை நாம் விரைவாக அடைவதற்கே உதவியாக இருக்கும் என்றேன்.

சிங்களம் மட்டும்தான் ஆட்சிமொழி, தமிழுக்கு இடமில்லை என்றார்கள். பின்னர் அவர்களாகவே தமிழும் ஆட்சிமொழி என்றார்கள். மோட்டார் வாகன இலக்கத் தகடுகளில் சிங்கள எழுத்துப் பொறித்தார்கள். எதிர்த்தபோது விடமாட்டோம், தொடர்ந்து சிங்கள எழுத்து இருக்கும் என்றார்கள். பின்னர் தாங்களாகவே சிங்கள எழுத்தையே எடுத்துவிட்டார்கள். இப்படியே இன்று எதிர்க்கும் தமிழீழத்தையும் அவர்களாகவே கொடுக்கும் நிலைவரும், நிச்சயம் வரும். நாங்கள் சகோதரர்களாக, சந்தோஷமாக மலேசியாவும், சிங்கப்பூரும் போல வாழ்வோம் என்று அவர்களாகவே சொல்லப்போகிறார்கள் இருந்துபாரும் என்று சொல்லிக்கொண்டே எழுந்தார் பரமசிவம்.

# இந்த வார பலன்

## 13-05-2005-19-05-2005

| ராகு | சூ புத | சுக் | சனி சந் |
|---|---|---|---|
| செவ் யுரே | 13 இ 11-03 கட - சந்<br>14 இ 9-33 இட - சூரி | | ___ |
| நெப் | 16 ப 11-36 சிங் - சந்<br>18 இ 10-51 கன் - சந் | | ___ |
| ___ | ___ | ___ | குரு கேது |

### மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியினருக்கு குடும்பத்தில் பல சிரமங்கள் தோன்றும். இனபந்துக்களிடையே கசப்புணர்வுகள் தென்படும். பணவருவாய் இருப்பினும், செலவுகள் சமாளிக்க முடியாமலிருக்கும்.

புத்திரர்களால் தொல்லைகள் ஏற்படும். தேகசுகமும் இடையிடையே பாதிப்படையக்கூடும்.

மங்கள கருமங்கள் உடன் கைகூடாது. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். எப்படியும் நன்மை கேட்கமுடியாது.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தமாகவே இருக்கும். பழைய முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். தொழிலாளர்களிடையே ஒற்றுமைக் குறைவு காட்டும். புதிய ஒப்பந்தங்கள் தாமதமடையும். மாணவர்களுக்கு கல்வியில் மந்த நிலை காணும்.

### இடபம்

*(கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங் கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இடபராசியில் ஜனனமானவர்களுக்கு குடும்ப நிலை சுமாராக இருக்கும். பணவருவாயும் செலவும் ஏறக்குறைய சரியாக இருக்கும்.

இன பந்துக்களின் வருகை அதிகரிக்கும். தேகசுகம் சுமாராக இருக்கும்.

மங்கள கருமங்கள் காலதாமதத்தின்மேல் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகம் இராது. சகதொழிலாளரு டன் ஒத்துப் பணியாற்றமுடியும். வர்த்தர்களுக்கு வியாபாரம் ஓரளவு நடக்கும். கணிசமான லாபம் கிடைக்கும். வங்கி உதவிகள் தாமதித்துக் கிடைக்கும். தொழிலாளர்களுக்கு ஒத்துழைப்புக் கிடைக்கும். மாணவர்களுக்கு முயற்சிக்கேற்ப சித்தி உண்டு.

### மிதுனம்


*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதஙகள், திருவாதிரை, புனர் பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்)*



மிதுனராசியினருக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பணவருவாய் சிறப்பாக அமையும். இன,மதக் கொண்டாட்டங்கள் சிறப்பாக நடக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும், உதவிகளும் கிட்டும். வீட்டில் சுப நிகழ்வுகள் நடக்கும். மங்கள கருமங்கள் விரைவில் கைகூடும் உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் வரவேற்புக் கிடைக்கும். பதவி உயர்ச்சி, ஊதிய உயர்வு கிடைக்க இடமுண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். நல்ல பணம் சேரும். வங்கி உதவிகளும் உண்டு. நகை வியாபாரிகள் கூடிய நன்மை பெறுவர். தொழிலாளர் மத்தியில் ஒற்றுமை வலுக்கும். புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமும், பரீட்சைகளில் சித்தியும் பெறுவர்.

### கடகம்

*(புனர் பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசிக்காரருக்கு குடும்பத்தில் அடிக்கடி சச்சரவுகள் ஏற்படும். புத்திரர்களால் தொல்லைகள் அதிகரிக்கும். வருவாய்க்கு மேல் செலவுகள் ஏற்படும். குடும்பப், பெண்கள் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். தேகசுகமும் அடிக்கடி பாதிக்கப்படும். மங்களகருமங்கள்கால வரையறையின்றிப் பின்தள்ளிப்போகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புக்கள் அதிகமாகும். சகல உதவிகளும் குறையும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலை காட்டும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். தொழிலாளர்களுக்கிடையில் ஒற்றுமைக்குறைவு காணப்படும். புதிய ஒப்பந்தங்கள் தாமதமாகும். மாணவர்கள் கல்வியிலும் பார்க்க, விளையாட்டில் கூடிய கவனம் செலுத்துவர்.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசிக்காரருக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணவன் -மனைவியிடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். புத்திரர்களால் மகிழ்ச்சி கிட்டும். பணவருவாய் திருப்திதரும். மங்கள கருமங்கள் விரைவில் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு வேலைகள் விரும்பியவாறு செய்யக்கூடியதாக இருக்கும். அதிகாரிகளும் ஒத்துழைப்பர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்படையும். நிகரலாபம் கிட்டும். இரும்பு வியாபாரிகள் கூடிய லாபம் பெறுவர். தொழிலாளர்களுக்குள் ஒற்றுமையும், புதிய ஒப்பந்தங்களும் கிடைக்கும். மாணவர்கள் கல்வி முன்னேற்றத்தையும் பரீட்சைகளில் சித்தியும் பெறுவர்.

### கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



கன்னி ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் உட்பூசல்கள் ஏற்படும். பிரயாசை கூடுதலாக இருக்கும். பிரயாசைக்கேற்ப வருவாய் கிடையாது.

உறவினர்களுக்கிடையேயும் கருத்து வேற்றுமைகள் இருக்கும். தொடங்கும் கருமங்களில் தடை தாமதம் காட்டும்.

உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பளு அதிகமாகும். எப்படித் தொழில் செய்தாலும் நன்மை கிடையாது. பதவி உயர்வு தள்ளிக்கொண்டு போகும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் குறைவாகவே இருக்கும். எதிர் பார்த்த லாபம் கிடையாது. புதிய யுக்திகளைக் கையாளவேண்டும்.

தொழிலாளர்களுக்கு எடுத்த ஒப்பந்தங்களைத் தவணைக்கு முடிக்க இயலாமலிருக்கும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

### துலாம்

*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலாராசியினருக்கு குடும்ப நிலை சுமாராக இருக்கும். பணவருவாய் இருந்தாலும் செலவுகளும்தவிர்க்க முடியாமலிருக்கும். தேகசுகம் சுமாராக இருக்கும். வெளிநாடுகளிலிருந்து நற்செய்தி கிட்டும். உறவினர்களிடையே சற்று மனத் தாங்கல்கள் ஏற்படும். மங்கல கருமங்கள் தாமதமாகி நிறைவுபெறும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புகள் கூடுதலாக இருக்கும். அதிகாரிகளுக்கேற்றவாறு நடந்து கொள்ளுதல் நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையிலேயே இருக்கும். இருப்பினும் முயற்சிக்கேற்ப லாபமுண்டு. தொழிலாளர்களுக்குள் ஒற்றுமை வலுக்கும். புதிய தொழில் ஒப்பந்தங்கள் தாமதமாகும். மாணவர்களுக்கு கல்வியில் அக்கறை குறையும்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



விருச்சிகராசியினருக்கு கிழமை முழுவதும் இன்னல் நிறைந்த நாளாகவே காணப்படுகிறது. புத்திரர்களாலும் இனத்தவர்களாலும் தொல்லைகள் வந்து கொண்டிருக்கும். தொழில் முயற்சிகளில் எதிர் பார்த்த வருவாய் கிடையாது. குடும்பத்தில் பணக்கஷ்டம் கூடுதலாக இருக்கும். மங்கள கருமங்கள் இப்போதைக்குக் கைகூடாது. உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் சில பிரச்சினைகள் தோன்றும். தமக்குக் கொடுக்கப்பட்ட பணிகளைக் குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க முடியாமல் கஷ்டப்படுவர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நட்டத்திலேயே நடக்கும். அலங்காரப் பொருட்கள் விற்பனை செய்வோர் சற்றுலாபமடைவர். தொழிலாளர்களுக்குள் ஒற்றுமையீனங்களும், பிரச்சினைகளும் எழும். மாணவர்கள் மத்தியில் விரக்தி மனப்பான்மை தோன்றும்.

### தனுசு

*(மூலம், பூராடம் உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுசு ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். இனசனங்களுடனான நல்லுறவு இருக்கும். எனினும் சில சந்தர்ப்பங்களில் கசப்புணர்வு நிலவும். பணவருவாய் திருப்திகரமாக இருக்கும். புத்திரர்களால் மகிழ்ச்சி உண்டு. மங்கள கருமங்கள் தாமதமாகி நடைபெறும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பொறுப்புகள் அதிகமாகும். ஊதிய உயர்வு கிடைக்கும். வர்த்தகர்களுக்கு முதலீடுகள் விற்பனையாகி லாபம் கொடுக்கும். புதிய முதலீடுகளுக்கும் நன்று. கடன் வியாபாரம் தவிர்க்கவேண்டும். தொழிலாளர்கள் ஒற்றுமையுடன் பல தொழில்களையும் செய்துமுடிப்பர். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றமும், பாராட்டுக்களும் உண்டு.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகர ராசியினருக்கு குடும்பத்தில் அமைதி நிலவும். கணவன் - மனைவி அந்நியோன்யம் வலுக்கும். புத்திரர்களால் மகிழ்ச்சி உண்டு.

பணவருவாய் திருப்திகரமாக அமையும். வீட்டில் சுபநிகழ்வுகள் நடைபெறும். மங்கள கருமங்கள் கைகூடி, புதுவாழ்வு ஆரம்பிக்கும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் வரவேற்பு உண்டு. பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும். அதிகாரிகள் ஒத்துழைப்பார்கள்.

வாத்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடைபெறும். புதிய முதலீடுகளைச் செய்ய வாய்ப்புகள் ஏற்படும்.

தொழிலாளர்களுக்குள் ஒற்றுமை வலுக்கும். புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம் தரும். உயர் கல்வி கிட்டும்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



கும்பராசிக்காரருக்கு குடும்ப வாழ்க்கை இனிமையாக இருந்தாலும், இடையிடையே சச்சரவுகளும் ஏற்படும். பணவருவாய் இருந்தாலும், செலவுகளும் கூடுதலாகவே இருக்கும்.

பெண்கள் ஆடம்பரங்களைக் குறைத்துக் கொள்வது நன்று. தேகசுகம் சுமாராக இருக்கும்.

மங்கள நிகழ்வுகள் கால தாமதத்தின்மேல் நடக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புகள் அதிகமானாலும் சமாளிக்கமுடியும்.

பதவி உயர்வு பின்தள்ளிப்போகும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும்.

தேங்கிக் கிடந்த பொருட்கள் பணமாக மாறும். வங்கி உதவிகளும் கிடைக்கும். புதிய முதலீடுகள் நன்மை தரும்.

தொழிலாளர்கள் சிறப்புடன் தொழிலாற்றி லாபம் பெறுவார்கள். புதிய தொழில்கள் கைச்சாத்தாகும். மாணவர்களுக்கு கல்வி உயர்ச்சியும், சித்திகளும், பாராட்டுக்களும் உண்டு.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்த ரட்டாதி, ரேவதி)*



மீன ராசியினருக்கு குடும்பத்தில் எப்போதும் சச்சரவுகள் தோன்றும். இனபந்துக்களுடன் பகைமை ஏற்படலாம்.

பணவருவாயிலும் பார்க்க செலவுகள் அதிகமாகும். புத்திரர்களால் தொல்லைகள் அதிகரிக்கும். தேக சுகமும் பாதிப்படையும். மங்கள கருமங்களிலும் இழுபறிநிலை தோன்றும். உத்தியோகத்தர்களுக்கு வேலைத் தளங்களில் பிரச்சினை தோன்றும். அதிகாரிகள் கடுமையாக நடந்து கொள்வர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நட்டத்திலேயே நடக்கும். லாபம் காண புதிய யுக்திகளைக் கையாள வேண்டும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும்.

தொழிலாளர்களுக்கி டையில் பல பிரச்சினைகள் உருவாகும். சமாதானத்தைக் கடைப்பிடிக்கவும். மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் குறைவாக இருக்கும்.

---

**நினைவுக் கட்டுரை** — **குமரேசன் புரந்தரன்**

# உலக தவில் மாமேதை வி.தெட்சணாமூர்த்தி

உலகம் போற்றும் உயர்ந்தவர்கள் , உன்னதமானவர்கள் வரிசையிலே ஈழத்துக்குப் பெருமை தேடித் தந்தவர்களில் உலகத் தவில்மேதை அமரர் வி.தெட்சணாமூர்த்தி முதன்மையானவர் என்றால் அது மிகையாகாது. மாமேதை என்று எதுவித தயக்கமும் இன்றி, போற்றப்பெற்ற மாபெரும் தவில் விற்பன்னர் தெட்சணாமூர்த்தி அவர்களாவார்.

ஈழத்தில் மட்டுமல்ல, உலகளாவிய ரீதியிலே தவில் வித்துவத்தைப் பரப்பி நின்றவர். கலைகளைப்பொறுத்த வரையில் பாரதத்துக்கு ஈழம் சளைத்தது அல்ல. சமனானது அல்லது ஈழம் தான் பெரியது என்று வரலாற்று முத்திரையைப் பதியவைத்தார்.

அவரது காலத்துக்கு முன்பாக அல்லது சமகாலத்திலே அவரது காலத்துக்கு பின்போ ஏன் இனிமேலாவது அப்படியொரு தவில் மாமேதையைக் கண்டிருக்கவோ அல்லது காணவோ முடியாது. அன்றி காணமுடியுமெனில் அது அவரின் மறு அவதாரமாகத்தான் இருக்க முடியும்.

இணுவிலைச் சேர்ந்த அமரர்கள் விஸ்வலிங்கம் ரத்தினம் தம்பதியினருக்கு 26-08-1933 ஆம் ஆண்டில் மகனாகப் பிறந்தார். இவருடைய பெற்றோர் இவரை ஒரு பெரிய தவில் வித்துவான் ஆக்க வேண்டும் என்ற ஆர்வத்தினால், சிறுவயதிலேயே அந்தக் காலகட்டத்தில் பிரபல தவில் விற்பன்னர்களாக விளங்கிய அமரர்கள் என்.சின்னத்தம்பி, பீ.எல் ராஜகோபால், காமாட்சி சுந்தரம்பிள்ளை ஆகியோரிடம் தவில் கலையைப் பயிற்றுவித்தனர்.

தனது எட்டாவது வயதிலேயே மேடைகளில் வாசிக்கத் தொடங்கிய இவர். பின்னர் உலகத்தவில் மேடைகளைத் தனதாக்கிக் கொண்ட உலகத் தவில் மேதையானார். இந்திய பிரபல தவில் விற்பன்னர்களிடம் இவரைப் பயிலவைக்க வேண்டும் என்ற பெற்றோரின் விருப்பத்தால் தவில் மேதை நாச்சிமார் கோயிலடி அமரர் இராகவப்பிள்ளையிடம் குருகுலவாசம் செய்து, தவில் பயில வைத்தனர்.

பின்பு தனது பெருமுயற்சியாலும், இறைவனது அருட்கொடையாலும் தனக்கென ஒரு தனித்துவத் தன்மை வகுத்து தவில் கலையில் ஒரு பெரு விற்பன்னரானார்.

பாரதத்தைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான நாதஸ்வரச் சக்கரவர்த்தி திருவாடுதுறை ரி.என். இராஜரத்தினம்பிள்ளை ,நாதஸ்வர விற்பன்னர் காரைக்குறிச்சி அருணாசலம், திருவானைக்காவல் ஷேக் சின்னமௌலானா ஸாஹிப் போன்ற பெரும் மேதைகளுக்கு மிக அற்புதமாகத் தவில் வாசித்துச் சிறந்த பாராட்டைப் பெற்றார்.

இந்தியாவிலே இசைவிழா உட்பட்ப் பல நிகழ்வுகளிலும் தவில் கச்சேரி ஒரு இடைவேளை நிகழ்ச்சியாகவே ஒரு காலத்தில் கணிக்கப்பெற்று வந்தது. ஆனால், அதைத் தனது தவில் வாசிக்கும் தனித் திறமையாலும், கவர்ச்சியாலும் நாதஸ்வர தவில் கச்சேரியின் முக்கிய அம்சமாக ரசிகர்கள் இருந்து கேட்டு, ரசிக்கும் அளவுக்கு மாற்றியமைத்த பெருமை அமரர் தெட்சணாமூர்த்தி அவர்களையே சாரும்.

இந்திய சபை ஒன்றிலே, பொதுவாக ஐந்து நடைகளிலும் கடினமாகிய சங்கீர்ண நடையில் 2 மணித்தியாலங்களுக்கு மேலாக லயவின்னியாசம் செய்துள்ளார். எந்தவிதமான தாளம், ஜதி, நடை என்றாலும் எல்லாமே கைவரப்பெற்றவராக சகல துறையிலும் திறமையாக தேர்ச்சி பெற்று விளங்கினார்

தெட்சணாமூர்த்தி அவர்கள் குறிப்பிட்ட ஒரு துறையில் விசேட தேர்ச்சி பெற்றவர் என்று அவரை வர்ணிக்கும் அளவுக்கு அவரது தவில் வாசிப்பை அளவிடக்கூடியவர்களாகவோ அன்றி மதிப்பிடக்கூடியவர்களாகவோ ஒருவரும் இருந்ததில்லை என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும். அத்துணை பெருமைமிக்க ஒரு மாமேதையாக விளங்கினார்.

வித்தியாசமான தாளங்களில், வித்தியாசமான இடங்களில் மிக அபாரமாக மணித்தியாலக் கணக்காக வாசிக்கும் திறமை கொண்டவர். நாதஸ்வர வித்துவான் ஷேக்சின்ன மௌலானா சாஹிப்பிற்குத் தெட்சணாமூர்த்தி அவர்கள் தவில் வாசித்த கச்சேரியை இந்திய பிரபல சங்கீத விமர்சகராகிய சுப்புடு அவர்களது இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ற இதழில் எல்லை கடந்த கலை நுணுக்கத்திறனின் உச்சம் என்ற இவரது வித்துவத்தன்மையைப் புகழ்ந்துள்ளார்.

கிருஷ்னகானசபாவில் நடைபெற்ற இந்த இசைவிழாவில் திருநந்தி தேவரே நேரில் வந்து தவில் வாசித்தாரோ என்று எண்ணும் அளவுக்கு ஒரு மனிதனின் கைவிரல்களால் இவ்வளவு நுண்மையான நாதபேதங்களை இசைக்க முடியும் என்று ஒரு போதும் கற்பனை கூடச் செய்து பார்த்ததில்லை என்று வர்ணித்துள்ளார்.

அந்த நாட்களிலே இந்தியா , சிங்கப்பூர் , மலேசியா போன்ற நாடுகளுக்குச் சென்று பல பெரும் சபைகளில் தவில் வாசித்து பெரும் புகழ்பெற்றவர். தாய் நாடாகிய ஈழத்துக்கு திரும்பியபோது ஈழத்தவர்கள் அவர்களுக்கு 'லயஞான குபேரபூபதி' என்ற ஒப்புயர்வான பட்டத்தை வழங்கிக் கௌரவித்தனர்.

ஈழத்து நாதஸ்வரக் கலைஞரான காலஞ்சென்ற கோண்டாவில் திருநாவுக்கரசு அவர்களுக்குத் தவில் வாசித்து மகிழ்ச்சியடைந்தமையால், தனது மனதுக்குப் பிடித்த நாதஸ்வரம் என்று கூறியிருந்தார்.

தான் கற்றவற்றை முழுமையாக வாசிக்க முடியவில்லையே என்பது தெட்சணாமூர்த்தி அவர்களது ஓர் ஆதங்கமாக இருந்தது. அண்மையில் அமரரான கலாசூரி அளவையூர் என்.கே. பத்மநாதனுக்கும் பலவருடங்களாக தவில் வாசித்து ரசிகர்களுக்கு விருந்து படைத்துள்ளார்.



உலகத்திலே உச்சமான நிலையில் படைக்கப்பட்டவர்கள் ஒரு யுகத்துக்கு ஒருவர் என்பது போல், இவரது வாழ்க்கை அமைந்து இருப்பதை நாம் பெரு இடைவெளியில் காணலாம்.

தெட்சணாமூர்த்தி கடினமான சில பிரயோகங்கள் இன்றைய உலகத் தவில் விற்பன்னர்களாலும் வாசிக்கப் பட இயலாத நிலையில் உள்ளன.

(11 ஆம் பக்கம் பார்க்க


# மாணவர்களின் கண்டனப் பேரணியின் சில காட்சிகள்







# நெடுமாறனை விடுவிப்பதற்கு எதிராக தமிழக அரசு நீதிமன்றில் மனுத்தாக்கல்

(சென்னை)

தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ. நெடுமாறன் உட்பட 6 பேரை பொடா (பயங்கர வாத தடுப்புச் சட்டம்) வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று பொடா மறு ஆய்வுக்குழு அளித்த உத்தரவை ரத்து செய்யக்கோரி தமிழக அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளது.

நீதிபதி பி.சதாசிவம் இந்த மனுவை விசார ணைக்கு ஏற்றார். இரண்டு நீதிபதிகள் விடு முறைக்குப் பின் இம்மனுவை விசாரிப்பர் என் றார் அவர்.

விடுதலைப்புலிகளை ஆதரித்து பேசியதாக பழ.நெடுமாறன், சுப.வீரபாண்டியன், பாவாணன், தாயப்பன், சாகுல் ஹமீது, பரந்தாமன் ஆகி யோர் பொடா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட னர். சென்னை அருகே பூந்தமல்லியில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் இவர்கள் மீது வழக்கு நடைபெறுகிறது.

பொடா சட்ட வழக்குகளை மறு ஆய்வு செய்ய மத்திய அரசால் நியமிக்கப்பட்ட குழு, இவர்களை இவ்வழக்கில் இருந்து விடுவிக்க வேண்டும் என்று கடந்த மாதம் 15ஆம் திகதி உத்தரவிட்டது.

இதை எதிர்த்து தமிழக அரசு சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது -

பொடா மறு ஆய்வுக்குழுவின் உத்தரவு, நீதி மன்ற நடவடிக்கைகளில் தலையிடுவதாக உள்ளது. பொலிஸார் சமர்ப்பித்த ஆதாரங் களைப் பரிசீலித்த பிறகே. பூந்தமல்லியில் உள்ள பொடா சிறப்பு நீதிமன்றம், இவ்வழக்கை விசாரணைக்கு ஏற்றது. நெடுமாறன் மீதும் மற்றவர்கள் மீதும் 11.08.2003 இல் குற்றச் சாட்டு பதிவுசெய்யப்பட்டது.

இந்நிலையில் பொடா மறு ஆய்வுக்குழு ஏற் படுத்தப்பட்டது. நிர்வாகிகள் அடங்கிய அக்குழு வின் பரிந்துரைகள் ஆலோசனையாகத்தான் கருதப்படும். நீதிமன்ற நடவடிக்கைகளையே ரத்து செய்யக்கூடிய விரிவான அதிகாரம், இத்த கைய நிர்வாகக் குழுவுக்குத் தரக்கூடாது.

தடைசெய்யப்பட்ட அமைப்பான விடுதலைப் புலிகளுக்கு நெடுமாறனும் மற்றவர்களும் ஆத ரவளித்தனர் என்ற விபரத்தை மறு ஆய்வுக் குழு பரிசீலிக்கவில்லை. அது மட்டுமன்றி அவர் கள் மீதான குற்றச்சாட்டு நீதிமன்ற விசாரணைக் குப் பிறகே நிரூபிக்கப்படும். எனவே இவர்களை விடுவிக்க வேண்டும் என்று பொடா மறு ஆய் வுக்குழு அளித்த உத்தரவை ரத்துச் செய்ய வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டுள்ளது.

## உலக நோக்கு

(10ஆம் பக்கத் தொடர்ச்சி.....)

உலகம் முழுவதும் கடுகளவேணும் மாசு மறையின்றி சகல கலைஞர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்தான் தெட்சணாமூர்த்தி அவர் கள். அவரிடம் நேரில் கற்காதவர்கள் கூட அவரு டைய தவில் வாசிக்கும் பாணியையே போத னையாகக் கற்றுக்கொள்ள முனைகின்றார்கள். சகல தவில் நாதஸ்வர மற்றும் இசைக்கலைஞர் களாலும் எந்தவிதக் குறையும் இன்றி தூய்மை யாக ஏற்றுக் கொள்ளப்பட்டமைதான் இந்தச் சக்கரவர்த்தியின் சிறப்பம்சமாகும்.

அதிசயமாக வாழ்பவர்கள் இந்த அவனியில் நீண்டகாலம்வாழ்வதில்லைப் போலும். அவரது 42 ஆவது அகவையிலே 13.05.1975 ஆம் ஆண்டில் இறைவன் தனது கலைத்துறைக்கு இந்தப் பெருங்கலைஞனை அழைத்துக் கொண்டான். பாரதத்திலேயே அன்னாரது மறை விற்குக் கடைகள் பூட்டப்பட்டடு கறுப்புக் கொடி கள் பறக்கவிடப்பட்டன என்றால் ஈழத்தின் சோகத்தைக் கூறவும் வேண்டுமா?

இவரது நினைவு மலரில் நவாலியூர் கலை யரசு சொர்ணலிங்கம் பட்டம் பதவியை இழந்து விட்டது என்றுகூறியுள்ளார். அதேபோல் தெட் சணாமூர்த்தி இவ்வுலக வாழ்வை நீத்தாலும் அவருடைய கலை அம்சம் நிலையம்சமாகி நீடூழி வாழும் என்பது நிஜமானதே.

# டிக்ஸிற் எழுதிய நூலில் குஜ்ரால் குறித்து விமர்சனம்

(புதுடெல்கி)

மறைந்த ஜே.என்.டிக்ஸிற் எழுதிய நூலில் முன்னாள் பிரதமர் ஐ.கே.குஜ்ரால் குறித்து கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளியுறவு சேவைகள் வரலாறு மற்றும் சவால்கள் என்ற தன்னுடைய நூலில் பணியில் இருந்த போது தனக்கு ஏற்பட்ட அனு பவங்களை இந்திய தேசிய பாதுகாப்புக்குழு முன்னாள் ஆலோசகர் மறைந்த ஜே.என்.டிக் ஸிற் எழுதியுள்ளார்.

இவர் பாதுகாப்புக் குழுவின் ஆலோசகராக இருந்தபோது வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த ஐ.கே.குஜ்ரால் வெளியுறவுக் கொள்கை களை கையாண்டவிதம் எத்தனை கடுமையான விமர்சனத்துக்கு உரியது என்பதை தன்னுடைய நூலில் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமீபத்தில் இந்த நூலை பிரதமர் மன்மோகன் சிங் வெளியிட்டார். நூலில் குஜ்ராலின் அணுகு முறைகள் வெளியுறவுக்கொள்கைகுறித்து அவ ரால் எடுக்கப்பட்ட முடிவுகள் அவரது சொந்த முடி வுகளாகவே இருந்ததை இந்நூல் சுட்டிக் காட்டு கின்றது.

வெளியுறவுக் கொள்கைகளில் அவர் காட் டிய அலட்சியம் வெளியுறவு சேவைகளில் மிகுந்த இடர்பாடுகளை ஏற்படுத்தியதாகவும் அவருடைய செய்தித் தொடர்பாளரின் செயற் பாடும் நாட்டின் வெளியுறவுக் கொள்கையில் முரண்பாடான சூழ்நிலை ஏற்படக் காரணமாக இருந்ததையும் இந்நூலில் டிக்ஸிற் விமர்சித் துள்ளார்.

# அமெரிக்கத் தலைநகரில் பறந்த இனந்தெரியாத விமானத்தால் அச்சம்

(வொஷிங்டன்)

அமெரிக்க தலைநகர் வொஷிங்டனுக்கு மேலாக ஒரு விமானம் அத்துமீறி பறந்தது. இத னால் வெள்ளை மாளிகையில் பீதியும், பதற்ற மும் ஏற்பட்டது.

அமெரிக்க தலைநகரம் வொஷிங்டனில் நேற்றுமுன்தினம் திடீரென ஒரு மர்ம விமானம் அத்துமீறி நுழைந்தது. தலைநகரில், தடைசெய் யப்பட்ட வான்வெளி எல்லைப் பகுதியில் அந்த விமானம் வட்டமடித்து பறந்ததால் நகரில் பீதி யும், பதற்றமும் ஏற்பட்டது.

இதன்போது நடாளுமன்றம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதில் இருந்தவர்களையும் வெள்ளை மாளிகையில் இருந்தவர்களையும் உடனடியாக அங்கிருந்து பாதுகாப்பான, ரயில் நிலையப் பகுதிக்கு ஓடும்படி அதிகாரிகள் தெரி வித்தனர்.

உடனடியாக பாதுகாப்பான இடங்களுக்கு தப்பித்து ஓடுங்கள் என்று அதிகாரிகள் அவர் களை எச்சரிக்கை செய்து விரட்டினார்கள்.

இந்தச் சம்பவத்தின்போது அதிபர் புஷ் வெள்ளை மாளிகையில் இல்லை.

உடனடியாக போர்விமானங்களுக்கு உத்த ரவு பறந்தது. அவை வானத்தில் வட்டமடித்து, அத்து மீறி நுழைந்த விமானத்தைத் தேடின.

வெள்ளை மாளிகையில் இருந்து பாது காப்பு வாகனங்கள் உடனடியாக வெளியேறிச் சென்றன.

பாதுகாப்புப்படைப் பிரிவினர் சில நிமிடங்க ளில், ஒன்றும் இல்லை, பயப்படத்தேவையில்லை என்று அறிவித்தனர். இதைத் தொடர்ந்து வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறிய வர்கள், மீண்டும் ஜனாதிபதி மாளிகைக்கு திரும் பினார்கள்.

சிறிது நேரத்தில் உள்நாட்டு பாதுகாப்புப் படை யினர், அத்து மீறி பறந்த விமானத்தைக் கண்டு பிடித்தனர். செச்னா என்று அழைக்கப்படும் சிறிய ரக விமானம் அது. அதில் வந்தது யார்? எப்படி வொஷிங்டனுக்குள் அனுமதியின்றி பறந்தது போன்ற விபரங்கள் தெரியவரவில்லை.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# மாகாண சபைகளிடம் புனரமைப்புப் பணிகள்!

## உலகவங்கி ஆலோசனை

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் அழிவடைந்த பாட சாலைகள் மற்றும் மருத்துவமனைகளை மீள் கட்டுமானம் செய்யும் பணிகளை மாகாண சபைகளிடம் ஒப்படைக்குமாறு உலகவங்கி ஆலோசனை தெரிவிக்கவுள்ளது.

எதிர்வரும் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் கண் டியில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு சமர்ப்பிக்கவுள்ள விசேட அறிக்கையிலேயே உலகவங்கி இந்த ஆலோசனையைத் தெரிவிக்கவுள்ளது.

இந்த விசேட அறிக்கையின் மூலம் உலக வங்கி மேலும் சில ஆலோசனை வழங்கவிருப்பதாகவும் தெரியவருகிறது.

இதன்படி - பிரதேச மட்டத்திலான வீதித் திருத்தம், நீர் வழங்கல், சுகாதாரம் போன்றவற்றை வழங்கும் நடவடிக்கைகள் பிரதேச சபைகள் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அனர்த்தங்களுக்குள்ளான மக்களுக்கு உதவிகள் வழங்கப்படுவது குறித்து மாவட்ட செயலர்கள் மட்டத்தில் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கி அவர்களது இயல்பு வாழ்வை ஏற்படுத் துவதற்கு அரசாங்கத்தின் உயர்மட்டத்திலிருந்து தெளிவான தேசியக் கொள்கை வகுக்கப்படவேண்டும்.

வெளிநாட்டு உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாகக் கிடைப்பதை உறுதிப்படுத்தவேண்டும் என்பன போன்ற ஆலோசனைகளும் உலகவங்கியால் முன்வைக்கப்படவுள்ளன.

இதேவேளை, கண்டியில் உதவி வழங்கும் மாநாடு நடைபெறும் தினங்களில் இந்த அறிக்கை இலங்கைக்கான உலகவங்கிப் பிரதிநிதி பீற்றர் ஹறோல்ட் மூலம் வெளியிடப்படவுள்ளது. (தே)

# தென்னிலங்கையில் ஐவருக்கு கொலை அச்சுறுத்தல்!

(கொழும்பு)

ஊடகவியலாளர் டி.சிவராம் படுகொலை தொடர்பான கருத்துக்களை வெளிப்படையாகத் தெரிவித்துவரும் ஐவருக்கு கடந்த இரண்டு நாட்களாக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊடகத்துறையைச் சேர்ந்த விக்டர் ஐவன், சுனந்த தேசப்பிரிய, இயக்குநர் தர்மசிறி பண்டாரநாயக்க மற்றும் புதிய இடதுசாரி முன்னணித் தலைவர்களான விக்கிரமபாகு கருணாரத்ன, வாசுதேவ நாணயக்கார போன்றோருக்கே கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

கடந்த இரண்டு நாட்களாகத் தொடர்ந்து பல தடவைகள் தொலைபேசி மூலம் இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும், இந்தக் கொலை அச்சுறுத்தல் குறித்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து இவர்கள் நேற்று முறையிட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# சந்திவெளித் தாக்குதலை நடத்திய 12 படையினரின் துப்பாக்கிகள் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைப்பு!

மட்டக்களப்பு - சந்திவெளியில் பொதுமக்கள் மீதான தாக்குதலுடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் 12 இராணுவத்தினரின் துப்பாக்கிகள் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்திவெளியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பொதுமக்கள் மீது கொம்மாந்துறை இராணுவ முகாமிலிருந்து வந்த படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததுடன், குண்டாந்தடிப் பிரயோகம் மேற்கொண்டிருந்தனர்.

இதனையடுத்து மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய 12 படையினரின் துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டு ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன.

அத்துடன், சம்பவம் நடைபெற்ற பகுதியில் கண்டெடுக்கப்பட்ட வெற்றுரவைகள் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன. இவை எதிர்வரும் திங்கட்கிழமை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை - சந்திவெளித் தாக்குதலை பொலிஸார் மேற்கொண்டதாக இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்நாயக்க தெரிவித்திருந்தார்.

இதையடுத்து ஏறாவூர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கிரிகல தலைமையிலான விசேட பொலிஸ் குழு விசாரணைகளை ஆரம்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஈ.பி.டி.பி...

டிருந்த பொலிஸ் வாகனத்தை குறிவைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் நான்கு பொலிஸார் படுகாயமடைந்தனர். இவர்களில் இருவரின் நிலை கவ லைக்கிடமாக இருந்ததை அடுத்து சிக்சைக்காக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

முன்னே சென்றுகொண்டிருந்த பொலிஸ் வாகனத்தைக் குறிவைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் - பொலிஸாரின் இரு வாகனங்கள் பலத்த சேதமடைந்திருந்தன.

அத்துடன், வீதியில் நிறுத்தப்பட்டிருந்த இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் வாகனத்தின் முன்புறக் கண்ணாடியும் துப்பாக்கிச்சூட்டில் பலத்த சேதமுற்றதாகவும் தெரியவருகிறது.

## நோர்வே...

திரங்களை திருத்துவதற்கு ஒரு வள்ளத்திற்கு ஒரு லட்சம் வழங்குவதாக உறுதியளித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து யாழ்.குடாநாட்டின் தற்போதய நிலைமையை நேரில் பார்வையிட்டதுடன், நல்லூரில் நேற்று நடைபெற்ற மாணவர் சமூகத்தின் கண்டனப் பேரணியையும் பார்வையிட்டார். நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் மாதகல், ஆழியவளை, சுண்டிக்குளம் மற்றும் முல்லைத்தீவு ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்து சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார்.

இன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்யும் நோர்வேத் தூதுவர் - விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசுவார் எனவும் தெரியவருகிறது.

## ஜப்பானிய...

இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம், சுனாமி புனரமைப்பு குறித்து ஆராயப்படும் என்றும் யசூஷிஅகாஷி தெரிவித்தார்.

## புலிகளின்...

வின் அச்சத்தையும் ஷியாம் சரண் சொல்ஹெய்மிடம் வெளிப்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை குறித்து இந்தச் சந்திப்பின்போது எரிக் சொல்ஹெய்ம் விளக்கமாக எடுத்துக் கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சியாம் சரணுடன் எரிக் சொல்ஹெய்ம் சந்தித்துப் பேச்சு நடத்தியது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியா...

வாரங்களுக்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த இந்திய வெளி விவகார அமைச்சின் செயலாளர் சியாம் சரணிடம் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு தொடர்பாக இலங்கை அதிகாரிகள் பேச்சு நடத்தியிருந்தனர்.

இந்தப் பேச்சுக்களின்போது - விடுதலைப் புலிகள் இரணைமடுவில் புதிதாக விமான ஓடுதளம் அமைத்திருப்பது தொடர்பாகவும், விமானங்களைப் பெற்றிருப்பது தொடர்பாகவும் இலங்கை அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டதாகத் தெரியவருகிறது.

புலிகள் விமானப்படைப் பலத்தைப் பெற்றிருப்பது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்றும் இதனால் இரு நாடுகளும் இணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பது அவசியம் என்றும் இலங்கை அதிகாரிகள் வலியுறுத்தியதாகவும் கூறப்படுகிறது.

இந்தப் பேச்சுக்களின்போது பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாட்டில் இணக்கம் காணப்படாத சில விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டு இணக்கப்பாடுகள் எட்டப்பட்டதாகவும் இலங்கை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன் தொடர்ச்சியாக அடுத்த மாதம் இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் இலங்கை வரும்போது பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு குறித்து இறுதிக்கட்டப் பேச்சுக்கள் நடத்தப்படும்.

இதனடிப்படையில் இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாட்டை விரைவாகச் செய்து கொள்வதற்கு இருநாடுகளும் அதிக ஆர்வம் காட்டிவருவதாகவும் தெரியவருகிறது.

# தமிழர் தாயகப் பகுதிகளில் புகழேந்தியின் ஓவிய கண்காட்சி

தமிழக ஓவியர் புகழேந்தியின் ஓவியக் கண்காட்சிகள் தமிழர் தாயகப் பகுதிகள் எங்கும் பரவலாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் ஜூன் முதலாம் திகதி வரை வன்னிப் பெருநிலப்பரப்பில் ஓவியக் கண்காட்சிகள் இடம்பெறவுள்ளன. வன்னியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, தர்மபுரம், முள்ளியவளை, மல்லாவி, பூநகரி, பளை ஆகிய இடங்களில் கண்காட்சிக்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, யாழ்.குடாநாட்டில் எதிர்வரும் ஜூன் 2 ஆம் திகதிமுதல் 8 ஆம் திகதிவரை யாழ். பல்கலைக்கழகத்திலும், வடமராட்சியிலும் ஓவியக் கண்காட்சி நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை உள்ளிட்ட தமிழர் தாயகத்தின் ஏனைய பகுதிகளிலும் இந்த ஓவியக் கண்காட்சி இடம்பெறவிருப்பதாகவும், அதற்கான திகதிகள் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சந்திவெளியில்...

எழுச்சிப்பேரவை ஊடகப் பேச்சாளர் கனகலிங்கம் ஆகியோர் கண்டன உரைகளை நிகழ்த்தினர். இதனைத் தொடர்ந்து - இராணுவத்தினரின் வெறியாட்டத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும், இன்று கல்லெறியும் கைகளை நாளை குண்டெறிய வைக்காதே, பேனா ஏந்தும் கைகளை ஆயுதம் ஏந்தவைக்காதே போன்ற கோஷங்களை எழுப்பினர்.

தொடர்ந்து போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதியிடம் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் ஆகியோர் தமது மகஜர்களைக் கையளித்தனர்.

இந்த மாபெரும் கண்டனப் பேரணியில் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

நாளை ஆரம்பமாகின்றது



திருமறைக் கலாமன்றம்
ஓவியக் கலைவட்டம்
நடத்தும்
கடல் வரைந்த ஓவியம்
-ஓவியக் கண்காட்சி-

காலம் - 14.05.2005 முதல் 21.05.2005 வரை
நேரம் - தினமும் காலை 10.00 மணி - மாலை 5.00 மணி
இடம் - கலாமுற்றம், இல: 15, தக்கா வீதி, யாழ்ப்பாணம்.

நுழைவு : இலவசம்

❋ டிசம்பர் 26, 2004 இல் உலகை உலுக்கிய ஆழிப் பேர் அடுக்கு அலைகளின் கோரத் தாண்டவத்தை, ஓவியக் கலைவட்ட இளம் ஓவியர்கள் ஓவியங்களாக உங்கள் முன் கொண்டு வருகிறார்கள்.

❋ ஏற்கனவே கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்டு, அனைவரது பாராட்டுக்களையும் பெற்ற இக் கண்காட்சி இப்பொழுது யாழ்ப்பாணத்திலும்......

கடல் வரைந்த ஓவியம் கண்டுயர்ந்தேனின்று
உடல் பதைத் துளம் துடித்து உணர் விழந்தேன்
அடல் வலி கொண்டு நின்ற ஆழிப் பேரலையழிவை
தடம் பதித்த ஓவியர்கள் தரம் கண்டு வியந்தேன்.
-தமிழருவி த.சிவகுமாரன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
-திருமறைக் கலாமன்றம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021-222 2393 (C/4120)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பிரமணியம் பரிமளம்

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த **சுப்பிரமணியம் பரிமளம்** அவர்கள் 12.05.2005 (வியாழன்) அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், உமாதேவி, சிவபாதம் ஆகியோரின் அருமைத் தாயாரும், இராஜேஸ்வரன், ஜெயந்தினி ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.05.2005 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் நடைபெறும்

இத்தகவலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவகுரு வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

தகவல்
குடும்பத்தினர்

### செல்வி பத்மலோஜனி செல்லத்துரை B.A

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி தோப்பை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட பத்மலோஜனி செல்லத்துரை 12.05.2005 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லத்துரை, சரஸ்வதி தம்பதிகளின் ஏகபுத்திரியும், நாகேந்திரன் (பொறியியலாளர்), சயனொளிபவன் (களஞ்சியப் பொறுப்பதிகாரி - நெல் சந்தைப்படுத்தும் சபை), ரவீந்திரன் (கால்நடை வைத்தியர் - அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சின்னப்பிள்ளை (வைத்திய நிபுணர் - யாழ். போதனா வைத்தியசாலை), சுகிர்தராணி (ஓய்வுபெற்ற ஆசிரியை), சூரியகாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13.05.2005 இன்று (வெள்ளிக்கிழமை) மாலை 4 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தோப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்
ச.முகுந்தன்
(மருமகன்)

(சி-1156)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.05.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# க.பொ.த உயர்தர மாதிரி பரீட்சை வினாத்தாள் 2005

## பொருளியல்

இராஜேஸ்வரன்

### தேசிய வருமான சமநிலை கணக்குகள்

1. குறிப்பிட்ட நுகர்வு நடத்தை தொடர்பாக வருமானம் 500 - 900 ரூபாவாக அதிகரித்த போது நுகர்வு 600 - 900 ரூபாவாக அதிகரித்தது.
1) எல்லை நுகர்வு நாட்டம்

2) தன்னிச்சையான நுகர்வு யாது?

3) நுகர்வு தொழிற்பாட்டு சமன்பாடு யாது?

4) தன்னிச்சையான சேமிப்பு யாது?

5) எந்த வருமான மட்டத்தில் சேமிப்பு பூச்சியம் ஆகும்.

2. அரச தலையீடு இல்லாத மூடப்பட்ட பொருளாதாரம் ஒன்றில் முதலீடு 600 மில்லியன் ஆகும். S=0. 2Y ஆகும். பொருளாதாரம் சமநிலையில் இருப்பதாக கொள்க.

1) சமநிலை வருமான மட்டம் யாது?

2) நுகர்வு யாது?

3) சேமிப்பு யாது?

3. மூடப்பட்ட பொருளாதாரம் ஒன்றில் நுகர்வு எப்போதும் செலவுக்கான வருமானத்தில் 75 வீதமாகும். முதலீடு 100 மில்லியன் ஆகும். அரசாங்க நடவடிக்கை எதுவும் இல்லை என கொள்க.
1) சமநிலை தேசிய வருமான மட்டம் யாது?

2) முதலீடு 150 மில்லியன் ஆக உயரின், புதிய சமநிலை தேசிய வருமானம் யாது?

3) முதலீட்டு பெருக்கி யாது?

4) இதன் விளக்கம் யாது?

4. மூடப்பட்ட பொருளாதாரம் ஒன்றில் தேசிய வருமானம் பற்றிய தகவல்கள் வருமாறு தரப்படுகின்றன.
நுகர்வு **(C) = 600+ 0.6y**
முதலீடு **(L)** = 400 மில் ரூபா
1) சமநிலை தேசிய வருமானம் யாது?

2) சமநிலையின் போது நுகர்வு மட்டம் யாது?

3) சேமிப்பு தொழிற்பாட்டு சமன்பாடு யாது?

4) சமநிலையின் போது சேமிப்பு மட்டம் யாது?

5. குறிப்பிட்ட பொருளாதாரம் ஒன்றின் தன்னிச்சையான நுகர்வு 300 மில். ரூபா ஆகும். இதனைவிட எஞ்சிய நுகர்வு - எல்லா வருமான மட்டங்களிலும் 60 வீதமாகும்.
1) நுகர்வு தொழிற்பாட்டு சார்பு யாது?

2) இப்பொருளாதாரத்தில் 200 மில் முதலீடு நிலையானது எனக் கொள்ளின் மொத்தக் கேள்வி யாது?

3) இப்பொருளாதாரத்தில் தன்னிச்சையான நுகர்வு இல்லையெனில் நுகர்வு தொழிற்பாடு யாது?

4) இச்சமநிலை தேசிய வருமானம் யாது?

5) தற்போது முதலீடு 100 மில். அதிகரிப்பின், சமநிலை தேசிய வருமானம் யாது?
6) சுயேட்சையான நுகர்வு இடம்பெறின், சமநிலை தேசிய வருமானம் யாது?

7) முதலீட்டு பெருக்கி யாது?

1. குறிப்பிட்ட பொருளாதாரம் ஒன்றுக்கான மாறிகள் வருமாறு தரப்படுகின்றது.
S = - 400 + 0.25y

முதலீடு 500 மில் ஆகும்.
1) சமநிலை தேசிய வருமானம் என்ன.

2) சுய நுகர்வு இல்லையெனில், சமநிலை தேசிய வருமானம் யாது?

3) தற்போது தன்னிச்சையான நுகர்வு உள்ள நிலையில் முதலீடு 700 மில் ஆக உயரின், சமநிலை தேசிய வருமானம் யாது?

7. பொருளாதாரம் ஒன்று தொடர்பான பின்வரும் தகவல்கள் தரப்படுகின்றன.

| வருமானம் (Y) | நுகர்வு (C) |
|---|---|
| 100 | 1750 |
| 2000 | 2500 |
| 3000 | 3250 |
| 4000 | 4000 |
| 5000 | 4750 |

1) நுகர்வு தொழிற்பாட்டு சமன்பாடு யாது?

2) 3000 மில். ரூபா வருமான மட்டத்தில் சராசரி நுகர்வு நாட்டம் யாது?

3) தன்னிச்சையான முதலீடு 400 மில். ஆயின் சமநிலை வருமான மட்டம் யாது?

4) முதலீடு 100 மில்லியனால் அதிகரிக்குமாயின், தேசிய வருமான மட்டம் எந்த வினால் அதிகரிக்கும் என எதிர்பார்க்கின்றீர்.

8. ஒரு பொருளாதாரம் ஒன்றின் நுகர்வுத் தொழிற்பாடு பின்வருமாறு தரப்படுகின்றது.
**C = 300 + 0.75y** ஆகும்.
இப்பொருளாதார நேர்வரி 100 மில்லியன் ரூபா ஆகும். புதிய நுகர்வுச் சமன்பாட்டினைக் காண்க.

9. மூடப்பட்ட பொருளாதாரம் ஒன்று தொடர்பான பின்வரும் தரவுகள் உமக்கு தரப்படுகின்றன.
**C = 200 + 0.6y**
**I =** 200 மில்லியன் ரூபா
**G =** 300 மில்லியன் ரூபா

1) சமநிலை தேசிய வருமான மட்டத்தைக் காண்க.

2) தற்போது அரசாங்கம் 150 மில்லியன் ரூபாவை நேர் வரியாக விதிக்கின்றது எனக் கொண்டு புதிய சமநிலை தேசிய வருமானத்தைக் காண்க.

3) புதிய சமநிலை தேசிய வருமான மட்டத்தில் நுகர்வின் அளவினைக் காண்க.

10. மூடப்பட்ட ஒரு பொருளாதாரம் தொடர்பாக பல்வேறு வருமான மட்டங்களிலான தேசிய வருமானத் தரவுகள் பின்வருமாறு தரப்படுகின்றன.

| வருமானம் (Y) | நுகர்வு (C) |
|---|---|
| 4000 | 3200 |
| 6000 | 4400 |

1) நுகர்வுத் தொழிற்பாட்டினைக் காண்க.

2) இங்கு முதலீடு 400 மில்லியன் ஆகும். அரசாங்க செலவீடு 300 மில்லியன் ஆகும். அரசினால் விதிக்கப்படும் நேர்வரி 100 மில்லியனாகவும் காணப்படின், சமநிலைத் தேசிய வருமான மட்டத்தைக் காண்க.

3) புதிய சமநிலைத் தேசிய வருமான மட்டத்தின் நுகர்வினைக் காண்க.

11. மூடப்பட்ட பொருளாதாரம் தொடர்பான பின்வரும் தரவுகள் தரப்படுகின்றன.

**C = 400 + 0.75Yd**
**I =** 400 மில்லியன் ரூபா
**G =** 100 மில்லியன் ரூபா
**T = 0.2Y**
1) சமநிலை தேசிய வருமானம் யாது?

2) அரசாங்க செலவீடு 100 மில்லியன் ரூபாவால் அதிகரிப்பின், சமநிலைத் தேசிய வருமானம் யாது?

12. திறந்த பொருளாதாரம் ஒன்று தொடர்பாக தேசிய வருமானம் பற்றிய தரவுகள் பின்வருமாறு தரப்படுகின்றது.

**C = 400 + 0.75Y G = 200**
**X = 150 I = 300**
**T = 100 M = 50**
சமநிலை தேசிய வருமான மட்டத்தைக் காண்க.

13. ஒரு பொருளாதாரம் தொடர்பாக பல்வேறுபட்ட வருமான மட்டங்களிலான நுகர்வு நாட்டங்கள் தரப்படுகின்றது.
வருமானம் 1000 ரூபாவாகக் காணப்பட்ட போது சராசரி நுகர்வு நாட்டம் 1.25 ஆகும். 2000 ரூபா வருமான மட்டத்தில் நுகர்வு நாட்டம் 1 ஆகும் நுகர்வுத் தொழிற்பாட்டு சமன்பாடு யாது?

14. பொருளாதாரம் ஒன்றில் வருமானம் 2000 ரூபாவாக காணப்பட்ட போது எல்லை நுகர்வு நாட்டம் 0.5 ஆகும் எனின் நுகர்வு தொழிற்பாட்டு சமன்பாடு யாது? இங்கு நுகர்வு மட்டம் 1600 ரூபா என கொள்க.

15. 

| வருமானம் (Y) | சேமிப்பு (S) |
|---|---|
| 500 | 100 |
| 1000 | 200 |

1) சேமிப்பு சமன்பாட்டினைத் தருக?

2) சேமிப்பு சமன்பாட்டில் a, b இன் பெறுமதி யாது?

16. நுகர்வோனின் வருமானம் 1000 ரூபாவாக இருந்த போது. சேமிப்பு 600 ரூபா ஆகும். எல்லை சேமிப்பு நாட்டம் 0.75 ஆகும்.

1) 1000, 2000 ரூபா வருமான மட்டங்களிலான சேமிப்பு மட்டங்களை இனம் காண்க.

2) சராசரி சேமிப்பு நாட்டங்களை மதிப்பிடுக.

3) சேமிப்பு சார்பு யாது?

4) பூச்சிய வருமானத்தில் சேமிப்பு யாது?

17. குறிப்பிட்ட பொருளாதாரத்தின் நுகர்வு தொழிற்பாட்டினை பின்வரும் தரவுகள் விளக்குகின்றன.

| வருமானம் (Y) | சராசரி நுகர்வு (ABC) |
|---|---|
| 400 | 1.00 |
| 500 | 0.92 |
| 600 | 0.866 |

1) எல்லை நுகர்வு நாட்டம் யாது?

2) பெருக்கியின் பெறுமதி யாது?

3) எந்த வருமான மட்டத்தில் சேமிப்பு 0 ஆகும்.

18. ஒரு பொருளாதாரத்தின் நுகர்வுத் தொழிற்பாடானது பின்வரும் சமன்பாட்டின் வடிவத்தில் தரப்படுகின்றது.

$C = 70 - 0.9y$

தனியார் முதலீடு 100 மில். சகல வருமான மட்டங்களிலும் நிலையானது

1) பின்வரும் வருமான மட்டங்களில்

வருமானம் :- 1000, 1200, 1500, 1700, 2000, 2200

நுகர்வு (C)

சேமிப்பு (S)

முதலீடு (I)

சராசரி நுகர்வு நாட்டம் (APC)

எல்லை சேமிப்பு நாட்டம் (MPS)

மொத்த கேள்வி (AD)

என்பவற்றை மதிப்பிடுக.

2) சமநிலை வருமான மட்டம் யாது?

19. குறித்த பொருளாதாரத்தில் ஒன்று தளம்பலின்றி 1000 ரூபா வருமான மட்டத்தில் முதலீடு 100 மில். சேமிப்பு 50 மில். வரி 150 மில் ஆயின், அரச செலவீடு யாது?

20. அரச தலையீடு உள்ள திறந்த பொருளாதாரம் ஒன்றில் இறக்குமதி 300 வரி 100, ஏற்றுமதி 100, அரச செலவீடு, 200 முதலீடு, 300 மில்லியன் ஆகும். இப் பொருளாதாரத்தின் சேமிப்பையும் வருமான மட்டத்தையும் மதிப்பிடுக.

21. மூடப்பட்ட எளிமையான பொருளாதாரம் ஒன்றில் தன்னிச்சையான நுகர்வு 200 மில் ரூபா ஆகும். தூண்டப்பட்ட நுகர்வு 0.8Y முதலீடு 100 மில் ரூபாவாகும் சமநிலை தேசிய வருமானம் யாது?

22. தேசிய வருமானம் தொடர்பாக வெளிநாட்டு வர்த்தகமில்லாத பொருளாதாரம் ஒன்று தொடர்பாக பின்வரும் தரவுகள் தரப்படுகின்றன.

முதலீடு $I = 50$ மில்லியன்.

அரசாங்க செலவு $(G) = 30$ மில்

நுகர்வு $(C) =$ செலவுக்கான வருமானத்தில் (Yd) 0.8

வரிகள் $(T) =$ மொத்த வருமானத்தில் (Y) 0.25

1) சமநிலையில் மொத்த வருமானம் யாது?

2) இங்கு வரவு -செலவுத்திட்ட மிகையா? குறையா காணப்படும்?

23. எளிமையான பொருளாதாரம் ஒன்றில் வருமானத்தில் நுகர்வுக்காக வீட்டுத்துறை 60 வீதத்தினை செலவிடுகின்றது. முதலீடு 150 மில். ஆகும்.

1) சமநிலை தேசிய வருமானம் யாது?

2) இப்பொருளாதாரத்தின் முதலீடு 100 மில்லியனால் அதிகரிக்கிறது எனின், புதிய வருமான மட்டம் யாது?

3) பெருக்கியின் பெறுமதி யாது?

4) அரசு 20 மில். ரூபாவை செலவாக மேற்கொள்வதற்காகவும் 10 வீத வருமான வரி அறவிடுவதற்காகவும் கொள்வின் புதிய வருமான மட்டம் யாது?

24. அரச தலையீடு இல்லாத ஒரு பொருளாதாரம் தொடர்பாக பின்வரும் தகவல்கள் தரப்படுகின்றது. முதலீடு 20 மில். ஏற்றுமதி, 10 நுகர்வுச் செலவு 9/10 வருமானத்தின் எல்லா மட்டங்களிலும் இதேபோல் இறக்குமதிகள் 1/9 நுகர்வுச் செலவில் (எல்லா வருமான மட்டங்களிலும்)

1) சமநிலை தேசிய வருமானம் யாது?

2) இறக்குமதி எந்தளவாக இருக்கும் ?

3) சென்மதி நிலுவையில் உள்ளதா?

4) ஏற்றுமதிகள் மாறாத நிலையில் முதலீட்டுச் செலவுகள் 15மில். ரூபா அதிகரிப்பின், புதிய சமநிலை தேசிய வருமானம் என்ன?

5) முதலீட்டில் ஏற்படும் இவ்வதிகரிப்பு சென்மதி நிலுவையில் என்ன பாதிப்பை ஏற்படுத்தும்.

25. பொருளாதாரம் ஒன்றின் தரவுகள் பின்வருமாறு தரப்படுகின்றது?

நுகர்வு 0.8 செலவிடக் கூடியவருமானம்

முதலீடு 520, அரசாங்கச் செலவீடு 800

வரிவிதிப்பு 0.5 வருமானம்

ஏற்றுமதிகள் 600

இறக்குமதி 0.2 வருமானம்

1) சமநிலை தேசிய வருமானத்தைக் கணிப்பிடுக.

2) தேசிய வருமானத்தை 1200 மில். ரூபாவால் அதிகரிக்க அரசு செலவீட்டை என்ன அளவால் அதிகரிக்க வேண்டும்.

26. பின்வரும் தகவல்கள் எளிய பொருளாதாரம் ஒன்று தொடர்பாக தரப்படுகின்றன

| வருமானம் | நுகர்வு |
|---|---|
| 1000 | 800 |
| 2000 | 1000 |

1) எல்லை நுகர்வு நாட்டம் யாது?

2) தன்னிச்சையான நுகர்வு யாது?

3) நுகர்வுச் சமன்பாட்டைத் தருக?

4) நுகர்வுக் கோட்டினை வரைக?

5) 1500 வருமான மட்டத்தில் நுகர்வு யாது?

6) 600 நுகர்வு மட்டத்தில் வருமானம் யாது?

7) சேமிப்பு அட்டவணையை தயார் செய்க?

8) எல்லை சேமிப்பு நாட்டம் யாது?

9) சேமிப்பு சமன்பாட்டைத் தருக?

10) ஒவ்வொரு வருமான மட்டத்திலும் சராசரி சேமிப்பு நாட்டத்தை மதிப்பிடுக.

11) இப்பொருளாதாரத்தின் முதலீடு மில்லியன் ஆயின், சமநிலைத் தேசிய வருமானம் யாது?

12) முதலீடு 50 மில்லியன் அதிகரிப்பின் புதிய சமநிலை வருமான மட்டம் யாது?

13) முதலீட்டுப் பெருக்கியாது (வருமானப்பெருக்கி)

27. அரசாங்க தலையீடு உள்ள மூடப்பட்ட பொருளாதாரம் ஒன்றின் சில தரவுகள் வருமானம் நுகர்வுத் தொழிற்பாடு $C=100+0.8Yd$ வருமான வரி விகிதாசாரத்திற்கு ஏற்ப எல்லா அரசாங்க வருமானமும் 25% அதிகரிக்கப்பட்டது. அப்போது

செலவிடக் கூடிய வருமானம் 0.75Y

தனியார் முதலீட்டுச்செலவு 1400 மில்லியன்

பொருட்கள், சேவைகள் மீதான அரசாங்க செலவு 2500 மில்.

தேசிய வருமானம் 10,000 மில்லியன்

1) ஆரம்ப நுகர்வுப் பெறுமதி யாது?

2) சேமிப்பு யாது?

3) வரி வருமானம் யாது?

4) இப்பொருளாதாரத்தின் APC இற்கும், NPC இற்கும் இடையிலான தொடர்பு யாது?

5) தனியார் முதலீட்டுச்செலவு 1000 மில்லியன் ஆகக் காணப்படும் போது ஏனையவை மாறாத வருமானத்தில் ஏற்படும் மாற்றம் யாது?

6) இந்நிலையில் வரவு - செலவுத் திட்டத்தில் பற்றாக்குறையா? மிகையா? ஏற்படும்.

28. பின்வரும் தகவல்கள் மூடப்பட்ட பொருளாதாரம் ஒன்று தொடர்பானவை.

நுகர்வு $C = 40 + 0.8Yd$

முதலீடு $T = 50$ மில்லியன்

அரசாங்கச் செலவு 10 மில்லியன்

வரி 5 மில்லியன்

1) சமநிலைத் தேசிய வருமானம் யாது?

2) அரசாங்கச்செலவு 5 மில்லியனாக அதிகரித்தால், புதிய சமநிலைத் தேசிய வருமானம் யாது?

3) வரியானது 10 ஆக அதிகரித்தால், புதிய சமநிலை வருமான மட்டம் யாது?

4) அரச செலவினப் பெருக்கி யாது?

5) வரி 5 மில்லியனாக உள்ளபோது, வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறை யாது? இதை எவ்வாறு நிதிப்படுத்தலாம்.